# இரும்புக் கதவுக்குள் இருந்து...

## கவிதை தொகுப்பு



ஆக்கம்

**விவேகானந்தனூர் சதீஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரும்புக்கதவுக்குள்ளிருந்து...

(கவிதைத் தொகுதி)

விவேகானந்தனூர் சதீஸ்
(Dip. in Journalism & mass media)

வெளியீடு
கலை இலக்கியக் கழகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | இரும்புக்கதவுக்குள்ளிருந்து.... (கவிதைத்தொகுதி) |
| ஆக்கியோன் | : | விவேகானந்தனூர் சதீஸ் விவேகானந்தநகர் கிழக்கு, கிளிநொச்சி |
| இரண்டாம் பதிப்பு | : | 2014 ஜனவரி |
| பதிப்புரிமை | : | ஆக்கியோனுக்கு |
| வெளியீடு | : | கலை இலக்கிய கழகம், யாழ்ப்பாணம் |
| கருத்தோவியம் | : | தி. ரதீஸ் |
| அட்டைப்படம் | : | மா. பார்த்தீபன் |
| அச்சுப்பதிப்பு | : | குரு அச்சகம் |

| | |
|---|---|
| NAME OF THE BOOK | : Irumbukathavukulirunthu (Poem) |
| AUTHOR | : Vivekananthanoor sathiesh Vivekananthanagar East, Kilinochchi v.nagersathiesh@gmail.com |
| SECOND EDITION | : 2014 January |
| COPY RIGHT | : Author |
| PUBLISHERS | : Kalai Elakiya Kalaham, Jaffna |
| COVER DESIGN | : M. Partheepan |
| PRINTED BY | : Guru Printers |
| ISBN | : 978-955-54448-0-4. |
| PRICE Rs. | : 230/= |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனக்குயிர் தந்த

என்னுயிர்த்தந்தை - அமரர்

சின்னையா செல்லையா

அவர்களுக்கு இந்நூல்

**சமர்ப்பணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

இறைவன் இனிதே இவ்வுலகைப் படைத்தான் மனிதன். இவ்வுலகைக்காண ஆறறிவுடன் உதித்தான். சிரித்து மகிழ்ந்து வாழ வேண்டிய மனிதகுலம் அறியாமையால் அநியாயமாக அழிந்து போகிறது. எல்லோரும் மனிதர்கள். எல்லோரும் வாழ்வதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டியது உயர் தர்மம். ஆனால் நம்மண்ணில் தர்மம், நீதி, அறம் என்ற சொற்கள் அருகிப் போய்விட்டது. இறைவன் என்றும் இழந்ததில்லை. நீதி ஒரு நாள் எவர் பிழைவிட்டாலும் கேட்கும். இதுவே ஆன்மீகம். கவிஞர் சதீஸ் அவர்களின் உள்ளக் குமுறல்கள் நூல் வடிவம் பெறுவது வரவேற்புக்குரியது. கவிஞர் தாகூர் கூறியது போல் என் கதை சொல்ல ஏதோ ஒரு பாதை திறந்திருக்கும் என்பது உண்மை. எம்மண்ணில் அமைதி உருவாக வேண்டும். கடவுளின் ஆசியும் மனித நேயமுள்ள மனிதர்களின் உறவும் கவிஞர் சதீஸ் கண்ணீரைத் துடைக்க வேண்டும். கவிஞனின் காலம் இவ்வுலகம் பேசும்.

**செஞ்சொற்செல்வர். கலாநிதி ஆறுதிருமுருகன்**
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

விவேகானந்தனூர் சதீஸ் தன்னுடைய கவிதைத் தொகுதிக்கு எழுதிய முன்னுரையில், இந்தத் தொகுப்பில் "என்னுடைய துன்பங்களும் எதிர்பார்ப்புகளும் கற்பனைகளும் அடங்கியிருந்தாலும்; வாசிப்போரின் மனதில் சமூக உணர்வுடனான நற்பண்புகளை மீள் நிறைக்க உதவுமென என்னுள் எண்ணுகின்றேன்" என்று குறிப்பிட்டுள்ளதைப் படித்த போது எனக்கு மாணிக்கவாசகருடைய சிவபுராணப் பாடலடிகளே நினைவுக்கு வந்தன.

வலுவான சொற்களையும் நல்ல சந்தத்தினையும் கவிஞர் பயன்படுத்துவதை அவருடைய கவிதைகளிலே காணக்கூடியதாயுள்ளது. எடுத்துக்காட்டாக "தலைவிதி" என்னும் கவிதையைப் பார்க்கலாம்.

நான் ஒரு அரசியல் கைதி...
மனைவி பிள்ளைகள் நிர்க்கதி
வன்னியில் உறவுகள் அகதி
பட்டினியில் மக்கள் அவதி ...

கவிதைத் தலைப்பிலுள்ள இறுதி எழுத்தாக அமைந்துள்ள கைதி, நிர்க்கதி, அகதி எல்லாருக்குமே அவதிதான் என்பதைக் கவிஞர் குறிப்பிடுகிறார்.

சிறைக்குள்ளிருந்தாலும் தன் பிள்ளையின் கல்லூரியை வாழ்த்த முனைகிறார் அப்பா. அப்பா தான் ஒரு நல்ல கவிஞன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையும் அதிலே பொறித்துவிடுகிறார். வட இந்து மகளிர் கல்லூரியை வாழ்த்த எண்ணிய கவிஞன் அது அமைந்துள்ள இடம் பற்றிக் கூறுமிடத்து...

வல்லைவெளி தாண்டிய
வற்றாத கடல்வனப்பும்
சொல்விளம்பி பொழிந்திடும்
ஈழமண்ணின் பனந்தோப்பும்
தொப்பளாவத்தை வைரவரின்
புகழ்பூத்த அருட்கொடையும்
திகட்டாத அறிவூட்டும்
யாழ்மண்ணின் ...
வட இந்து மகளிர் கல்லூரி
வாழ்க பல்லாண்டு
வாழ்க.. வாழ்க..

என்று கடல் வனப்பினையும் சொல்விளம்பி (கள்) பொழியும் பனந்தோப்பினையும் அருட்கொடை வழங்கும் வைரவரையும் வட இந்து மகளிர் கல்லூரியினையும் அடுக்கிக் காட்டுகிறார்.

சிறைக்கூடத்தில் இருந்து பண்டிட் ஜவகர்லால் நேரு தன்னுடைய மகள் இந்திராவுக்கு “என் பிரியமான பிரியதர்சினிக்கு“ என்று எழுதிய கடிதங்களின் தொகுப்பு பின்நாளில் நூலாக வெளியானது. அது வெறும் கடிதங்கள் கொண்ட நூல் மாத்திரமல்ல. உணர்வு, ஒழுங்கு, வாழ்வின் இலட்சியம், தூரநோக்கு எனப் பல நல்லவற்றை உள்ளடக்கிய நூல். சதீசினுடைய கவிதைகளும் பல நல்ல கருத்துக்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டனவாக அமைகின்றன. "கொலைவெறி" என்னும் கவிதை...

வாகனங்களின் பெருக்கம்
வீதிகளில் நெருக்கம்
பயணிகள் கலக்கம்
சாரதிகள் மயக்கம்

விபத்துக்கள் அதிகரிப்பு
வீணான உயிரிழப்பு
தரமற்ற ஊர்திகளின்
தரமான புகைப்பு
தாரில்லா வீதிகளின்
தினம்புழுதிக் குளிப்பு...

என உண்மை நிலைகளையும் உணர்வுகளையும் புலப்படுத்துகின்றது. வாகன விபத்துக்கள் அதிகரித்துள்ள இக்காலத்துக்கு ஏற்ற கவிதையாக இது அமைகிறது . ஒரு வீட்டிலே ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் இருக்கும் நிலை அதிகரித் துள்ளது. அதேவேளை பொதுமக்கள் அரச வாகன சேவை செம்மையுற வேண்டும், இல்லாவிடில் கவிஞன் கூறுவதுபோல வீதிகள் நெருக்கமாகி விபத்துக்கள் அதிகரிக்கும்.

சிறைக்கூடமும் பயன்தரு இடமாக ஆகிவிடுகின்றது. சதீஸ் என்னும் கவிஞனை அது உருவாக்கித் தந்துள்ளது. சிறைக்குள்ளிருந்து மனம் புழுங்குகின்றபோதும் தன்னை எண்ணியெண்ணி நிற்பவரை மனத்திலே நினைத்து ஆறுதலும் சிறு மனமகிழ்வும் எய்துவதைச் சில கவிதைகள் கூறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவள் மனதின்
கம்பீரம் - என்
இதயம் பாடிடும்
சங்கீதம்....
ஒருபோதும்
ஓயாத - உன்
சிந்தனை
என் விடுதலைக்கு - நீ
பாடிடும் வந்தனை....

என்னும் பாடலடிகள் தன் துணைவியின் மனவுரத்தை வியக்கின்றன.

விவேகானந்தனூர் சதீசினுடைய இக்கவிதைத் தொகுதிக்கு இந்த அணிந்துரையை எழுதும் போது, சதீஸ் என்னும் கவிஞன் மிக விரைவிலே விடுதலையாகி சமூக ஏற்றத்துக்கும் மானிட வளத்துக்கும் பயன்படக்கூடிய நல்ல கவிதைகளைப் பெருமளவிலே பாட எல்லாம் வல்ல இறைவனை மனத்துக்குள்ளே வேண்டிக் கொண்டே இருக்கிறேன்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
வாழ்நாட் பேராசிரியர்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

படைப்புலகில் பார்போற்ற...
வீரம் விளைந்த மண்ணில்
வெற்றித்தாய் பெற்றெடுத்த
விவேகானந்தனூர் மைந்தனே!

விதி செய்த சதியால் விலங்கு மாட்டி
சிறகொடிந்த பறவை போல் சிறைக்குள்!
விழி தூங்க மறுத்த இரவுகளை
வீணாக்காது - உன்
எண்ணங்களை .... வண்ணங்களாய்
வார்த்தைகளில் வடித்து விட்டாய்

சொந்தங்களை தொலைத்து
சொல்லொனா சோகங்களை சுமந்து
விடுதலை ஏக்கத்தில்...
கலைக் கண் நோக்க ...
கம்பிக்கூட்டு கனத்த இதயத்தினுள்
கவி முகம் தோன்றி
வலிகள் பேசுது நண்பா உன் கவி!
கலையும் நண்பா எங்கள் சோகம்
கவலைகள் தீர
நிலையான துயரம் நீங்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமைகள் மாறி - வரும்
அந்நாளை...
நம்பிக்கையோடு தேடுவோம்
நாளைய பொழுதை நமதாக்க!

பரணி பாடும் உன் கவி
பாரெங்கும் இசைக்கட்டும் சங்கீதமாய்
பன்னாட்டவரும் வியக்க - உன்
படைப்புகள் பதியட்டும்
புதிய வரலாற்றில்!

மனைவியை கரம் பிடித்து
மடியில் தவழும் மகளின் புன்சிரிப்பு
மங்களமாய் உன் செவியில் கேட்கும்
சிறையில் பட்ட சிந்தனைகள்
சிறகடித்துப் பறக்கின்றது - உன்
"இரும்புக்கதவுக்குளிருந்து.... "

கொண்ட கொள்கையில்
குன்றிடா லட்சியம்
தளராத துணிவுடன்
தணியாத கலைத்தாகம்
கொண்ட நீ..
வெற்றிப் பாதையில்
வீறு நடை போட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்காப் புகழ் பெற்று

தரணியில் வலம்வர....

இரத்தம் படிந்த

வெஞ்சுவரினுள்ளிருந்து

இதயம் கனிந்து

வாழ்த்துகின்றேன்!

மு. கோமகன்

மாநகரசபை உறுப்பினர்

யாழ்ப்பாணம்.

15.05.2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

அவனியில் அவதரித்த குற்றத்திற்காக அடைத்து வைக்கப்பட்டுள்ளதால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த போதிலும் தனது உள்ளக் கிடக்கைகளையும் உணர்வுகளையும் கவிதை வடிவில் தொகுத்து, அதற்கு "இரும்புக் கதவுக்குள்ளிருந்து...." என அர்த்தமான ஒரு பெயரிட்டு ஆக்கப்பட்டுள்ள இந்நூலுக்கு சிறைக்கூடத்தினுள் ஆக்கியோனுடன் ஒருவனாக இருந்து அணிந்துரை வழங்குவதில் அகமகிழ் வெய்துகின்றேன்.

"இரும்புக் கதவுக்குள்ளிருந்து..." என்ற கவிதைத் தொகுப்பை ஆக்கிய விவேகானந்தனூர்சதீஸ் அவர்கள் கடந்த ஆறு ஆண்டுகளாக சிறைக்குள் அடைக்கப்பட்ட போதிலும் தன்னைப் போலவே அடைக்கப்பட்டு இக்கூண்டினுள் வாழ்வோரின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்தவர்.

ஆயினும் தற்போது அவரது கன்னி முயற்சியாக இக்கவிதைத் தொகுப்பு ஒரு ஆவணமாக அச்சுருப்பெற்று வெளியீடு செய்யப்படுவதால் அவர்களுள் ஒருவனாக வாழ்ந்து கொண்டிருக்கும் நான் உளப்பூரிப்படைகிறேன்.

எமது மண்ணில் அரங்கேறிய அவலங்கள், சிறைவாழ்க்கையின் சீரழிவு, சிறையில் இருப்பவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் படும் வேதனைகள் என்ற பல்வேறு தொனிப் பொருள்களிலும் இக்கவிதைத் தொகுப்பு ஆக்கப்பட்டுள்ளது. யாருமே படித்து இவ்வுணர்வலைகளைத் தெளிவாக விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் இலகு தமிழில் இது அமைந்துள்ளது. ஆகையால் இதனைப் படிப்போர் இதில் உள்ள விடயங்களை ஐயந்திரிபுற உணர்வார்களாயின் ஆக்கியோனின் எதிர்பார்ப்பு நிச்சயம் நிறைவேறும்.

அந்த வகையில் இந்நூலை ஆக்கிய விவேகானந்தனூர் - சதீஸ் அவர்களும், அவருக்கு உறுதுணையாக இருந்து சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய நண்பர்களுக்கும், அச்சிட்டு வெளியீடு செய்யும் வெளியீட்டாளர்களுக்கும், வேறு வழியில் வெளியில் இருந்து இந்நூலாக்கத்திற்கு உதவிய அனைத்து உள்ளங்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனது நன்றிகள். அத்துடன் இவரது பணி மேலும் சிறக்க எனது ஆசிகளும் வாழ்த்துக்களும்

திரு. க. சத்தியசீலன்
(B.com, P.G, Dip in Edu. M. Ed)
வவுனியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இதயத்திலிருந்து....

"சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்பது கவிதை" என்ற மகாகவி பாரதியாரின் கூற்றிற்கிணங்க அனேகமானோர் தமது வாழ்க்கையோட்டத்தில் ஏற்படும் வாழ்வுமீதான சுற்றுச் சூழல் மாற்றங்களையும் அதன்பால் ஏற்படும் மன அவலங்களின் வெளிப்பாடுகளையும் கலை நயமூட்டி இலக்கிய படைப்புகளாக படைக்கிறார்கள்.

அவ்வாறு எதிர்பாராத அற்புதமான பல கணங்கள் நமது அன்றாட வாழ்வில் மோதிச் செல்கின்றன. அந்தக் கணங்களில் நாம் ஆச்சரியத்திலும் அதிர்ச்சியிலும் அமிழ்ந்து போய் விடுகிறோம். அவ்வாறு நான் அமிழ்ந்தவற்றில் அகப்பட்டதை சிறைபிடித்து எனது சமூகத்திடம் ஒப்படைக்க முயல்கின்றேன். இதில் சமூகம் எதிர்கொள்ளும் அகவாழ்வின் நெருக்கடி காட்சிகளை கையகப்படுத்தி கவிவடிவில் கடத்த வேண்டுமென்ற உந்துதல் மனதில் உண்டாவதற்கு ஏற்ற சூழல் எதிர்பாராமல் என் வாழ்வில் அமைந்துவிட்டது. அதன் விளைச்சலே இந்த "இரும்புக்கதவுக்குள்ளிருந்து...." என்ற கவிதைத் தொகுப்பு.

சங்கத்தமிழ் இலக்கியத்தையோ... தொல்காப்பிய இலக்கணத்தையோ நான் தொட்டுப்பார்க்கவில்லை. கண்டதையும் வாசிக்க காலம் இடங்கொடாததால் கையில் கிடைத்தவற்றை வாசித்தேன். எமது சமுதாயம் எதிர்கொள்ளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடுதியான மாற்றங்களும் எனக்குள்ளே கணன்று கொண்டிருக்கும் குறிப்பிட்ட உணர்வுகளின் வெளிப்பாடுகளும் நான் எழுத கால்கோளிட்டது என்று கூறலாம்.

இது போல் தமிழர் தம் காலவோட்டப் பதிவுகளை இலக்கிய படைப்புகளினூடாக சகோதர சமூகங்களின் மனதை உறுத்தாத வகையில் எடுத்தியம்பி காலத்தின் கண்ணாடியாய் தரவேற்றம் செய்வது ஒவ்வொருவரினதும் கடமையாகும். எமது சமூகத்தில் பலரது பார்வை படாத இடுக்கு முடுக்குகளிலெல்லாம் வலி மிகுந்த இடஞ்சல்களும், நெருக்கீடுகளும் நிறைந்தே காணப்படுகிறது. அவைகள் இலைமறை காய்களாக இருக்கும் பல படைப்பாளி களின் கைகளிலும் மனங்களிலும் பதுங்கிக் கிடப்பது நினைவில் கொள்ளத்தக்கது மட்டுமன்றி அவற்றுக்கு களமமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதும் இந்த முதல் நூல் பிரசவத்தாயின் பேரவா என்றால் மிகையாகாது.

"தீர்க்கப்படாத பிரச்சினைகளும் பிரகாசமான வெற்றிகளும் சேர்ந்த கூட்டுக்கலவைதான் வாழ்க்கை" எனும் அறிவுப் புயல் அப்துல் கலாமின் வரிகளுக்கமைய என்னுடைய வாழ்க்கையின் துன்பங்களும், எதிர்பார்ப்புகளும், கற்பனைகளும் இக்கவித் தொகுப்பில் அடங்கியிருந்தாலும் வாசிப்போரின் மனதில் சமூக உணர்வுடனான நற்பண்புகளை மீள் நிறைக்க உதவுமென என்னுள் எண்ணுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகமாகக் கடந்து சென்ற முப்பது மடங்கு முன்னூற்று அறுபத்தைந்து நாட்களின் வரிசையில் நான் அணைத்தவை மற்றும் அறைந்தவைகளை "இரும்புக் கதவுக்குள்ளிருந்து..." எனும் இலை விரித்து கொறிக்கத் தந்துள்ளேன். என் போன்ற எத்தனையோ உள்ளங்கள் தம் உள்ளக்கிடக்கைகளை கொட்டித் தீர்க்க முடியாது அல்லது அதன் வழி அறியாது தமக்குள் அடக்கிக் கொண்டு நடமாடுகின்றனர். என் மனதில் பாரமாக இருக்கும் வலியின் வலிகளை இங்கு விதைப்பது... வாசித்து விட்டு சர்ச்சைகளை அறுவடை செய்வதற்கன்று என்பதை இத்தாளில் பதித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

மனதுறையும் அகவுணர்வுகளை மறை பொருளாக வெளிப்படுத்துவதன் மூலம் பிரச்சினைகளின் மூலக் கூறுகளுக்கான மூலிகையினை தேடிக்கொள்ளலாம் என நினைக்கின்றேன். எனது பல்வேறு படைப்புகளுக்கும் முதன் முதலில் பாய்விரித்து களமமைத்துத் தந்த "இருக்கிறம்" சஞ்சிகையையும் "சுடர் ஒளி" பத்திரிகையையும் ஏனைய பத்திரிகைகள், இதழ்களையும் இவ்விடத்தில் குறித்துரைக் கின்றேன்.

எனது கன்னி முயற்சி முகையவிழ ஆசியுரை, அணிந்துரை, வாழ்த்துரை வழங்கிய பேருள்ளங்களுக்கும், நிதியுதவி நல்கிய முன்னணியினருக்கும் கவித்தொகுப்பை வெளியிட்டு வழிகாட்டிய யாழ் கலை இலக்கியக் கழகத்தினருக்கும் கருத்தோவிய கலைஞர், நூலை அச்சிட்டோர், மற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்கமளித்து உதவி புரிந்து உதயம் காண வைத்த அனைத்து இதயங்களுக்கும், மற்றும் எனதிந்த முதல் முயற்சிக்கு முத்தம் தர வேண்டிய வாசகநெஞ்சங்களுக்கும் அன்பகலா நன்றிகளை மகிழ்வுடன் சமர்ப்பிக்கின்றேன்.

"சொல்ல வல்லன் சோர்வு இலன் அஞ்சான்
அவனை இகல்வெல்லல் யார்க்கும் அறிது"
- பொது மறைவாக்கு

என்றும் அன்புடன்

**விவேகானந்தனூர் சதீஸ்**

விவேகானந்தநகர் கிழக்கு,
கிளிநெச்சி.

21.02.2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே....

*i* ஆசிச் செய்தி
*ii* அணிந்துரை
*iii* வாழ்த்துரை
*iv* முன்னுரை
*v* என் இதயத்திலிருந்து....
*vi* காத்தருள்வாய் கிளிநகர் கந்தா!

*01* பிரசவித்த பேரன்னையை ........
*02* விடிவு
*03* காலத்தின் விளைவு
*04* இருப்பு
*05* அனல் மழை
*06* பிதாமகன்
*07* ஊடகவியலாளனானால்
*08* கண்கள் சொன்னவை
*09* காதலர்தினம் - 2013
*10* உணர்வூட்டிய வன்னி மண்
*11* மங்கையும் மனிதரே
*12* வேதனை
*13* கரம் கொடுங்கள்
*14* மணி
*15* வியர்வை
*16* வாழ்த்து மழை
*17* துப்பாக்கி ....
*18* நட்பின் எல்லை
*19* உறவுகள் நாம்
*20* இரும்புக்கதவுக்குள்ளிருந்து..
*21* பிணி தீர்க்கும் பெருவிருட்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 கையடக்க காதல்
23 தமிழ் கைதி நான்
24 பு(ப)கை வேண்டாம்
25 நாளைய தலைவர்கள்
26 கேட்கவில்லையா?
27 எதிர் காலம் ???
28 பேச்சு வார்த்தை
29 அண்ணாவுக்கொரு கண்ணீர் மடல்
30 இறைவனின் கொடை
31 நத்தார் பண்டிகை - 2009
32 புதியதோர் பிறப்பிற்காய்
33 அறிவுப் புயலின் அனுபவ வரிகள்
34 என்னவளே சியா
35 தனிமையின் கொடுமை
36 இளைய சமூகமே
37 ஊடக அலை சத்தியமூர்த்தி
38 கொலை வெறி
39 காத்திருப்பு
40 காதலர் குணம்
41 மனிதா (அ) பிமான சேவகன்
42 எப்படி இருக்கிறார்கள்?
43 அத்தானுக்கோர் நல்வழி
44 விழிப்பு
45 உலக உணவும் தினம்
46 புது + இன + பத்திரிகை
47 தாடி
48 கட்சிகள்
49 ஊன்று கோல்
50 தாய் மண்ணைக் காதலி
51 தலைவிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52 மாண்புமிகு மகளீரே
53 ஒற்றுமை முரசு
54 என் வாழ்வு திரும்புமா?
55 வாழ்க வட இந்து
56 நேசிப்பு
57 துள்ளித் திரிந்த பள்ளி நினைவுகள்
58 இடப் பெயர்வு
59 சமூகமே! நீயும் சமூகத் துரோகியா?
60 சிறையிலிருந்து அம்மாவுக்கு
61 தைத்திருநாள் 2009
62 உறவிற்காய் ஒரு தீபம்
63 காற்றின் நிறம் கறுப்பு அல்ல...
64 உன்னால் முடியும்
65 பெண் விடுதலை
66 கை கோர்ப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காத்தருள்வாய் கிளிநகர் கந்தா!

வன்னியூர் பதிமேவும் வள்ளி மணாளனே
வல்லமை யாவும் கொண்ட வடிவேல் அழகா - இவ்
வையத்தை வாழ்விக்க வரமருள்வாய்!

கிளிநகர் உறைபவனே கந்தா - எம்
தேச நலன் காத்திடையா
விதையுண்டநாயகரின் வாஞ்சை நிறைவேற்றிடையா!

ஊரோடு உறவிழந்து உற்றார் தனை பிரிந்து
திக்கற்று நிற்கும் தாயக சொந்தங்களை
தந்தையாய் இருந்து தேற்றிடையா!.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசவித்த பேரன்னையை ........
# வாழும் போதே வாழ்த்துகின்றேன்!

ஐயிரண்டு திங்கள்
அகவயிற்றில் எனைத்தாங்கி
அழகாய் ஈன்றெடுத்து
உலகை காண்பித்த
உத்தமி நீயே அம்மா!

குருதியைப் பாலாக்கி
வியர்வையை நீராக்கி
நிறைவான அமுதூட்டி - நீ
பசியோடிருந்த நாட்களை
மறக்கவில்லை அம்மா!

விவேகானந்தனூரில்
விபரமாய் எனை வளர்த்து
கனகாம்பிகையூரில்
கச்சிதமாய் கல்வி நல்கிய
முதற் குரு நீதான் அம்மா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி நிலம் தன்னை
வறுமை வாட்டிய போதும்
பெருமையாய் எனைக் காத்து
பருவமாய் ஆக்கிய
பவளவள்ளி நீயே அம்மா!

முதுவயதில் உனைத்தேற்ற முடியாமல்
மூடிய சிறைக்குள்
முடக்கிவிட்டவன் இறைவன்
மன்னித்தருள்வாயோ
மகேஸ்வரி அம்மா!

மறுபிறப்பு எனக்கிருந்தால்
நான் உனக்குத் தாயாக
மறுபடியும் பிறந்து வந்து
செஞ்சோற்றுக் கடன் தீர்க்க
கிளி.நகர் கந்தனே கிருபை தா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் போதே வாழ்த்துகிறேன் - இவ்
வையகத்தின் தெய்வந்தன்னை
வேலவனின் துணையோடு
வளமாக நலமாக
வட மண்ணில் வாழ்கவென்று!

விவேகானந்தனூர் சதீஸ்
கிளிநொச்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவு

எந்தன் அம்மாவுக்கு
சின்ன மகன் வரையும் - சில
சிந்தனைச் சிதறல்கள்
இரும்புக் கூட்டில் - நான்
இருப்பதாய் எண்ணி
இன்றை தொலைக்காதே அம்மா ...
நாளையென்னும் ...
நாளை யெண்ணி - நம்
வருங் காலமெண்ணி
எச்சரிக்கையாயிரம்மா
எதிர் நீச்சல் போடம்மா..

எந்தத் துன்பமும்
முடியாமல் போனதில்லை
எந்த வெள்ளமும்
வடியாமல் நின்றதில்லை.
சதிராடிய நம் வாழ்வில்
சிறை வாழ்வு குறிக்கிட்டு
திசை மாறிய புயலொரு நாள்
நிச்சயம் தணியுமம்மா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரராம் அன்புத் தந்தை
காத்திடுவார் என்றும் நம்மை
போக்கிடுவார் இன்னல் தன்னை ...
நகைத்தவர் நாணிட
நன்மைகள் தேடி வர
வெறுத்த உறவுகள் வீடு நாடி வர
கிழக்குமொரு நாள்
சிவக்குமம்மா
எனக்குமொரு நாள் - விடிவு
கிடைக்குமம்மா!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தின் விளைவு

அனுபவப் பூக்களை
கொய்து
நற்றமிழ் நார்
எடுத்தோர்
கவிமாலை
நான் தொடுத்தேன்
இலக்கியவாதிகளின்

பாராட்டை
நானெதிர் பார்க்கவில்லை
இருந்தும்
எம் தழிழ்ப் படைப்பாளியின்
பரிந்துரையை
புறந்தள்ள நான்
கவி மாமணியல்லவே
கவனமாய்க் கேட்கின்றேன்...

காலத்தின் விளைவுதனை
கவியாய் வடிப்பதில் - நான்
தோற்றாலும் குறைவில்லை
காலவோட்டத்தில்
நானும் ஓடினேன்
என்ற நிறைவு
எனக்குண்டு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பு

கிழித்தெறியப்பட்ட
இதயத்தாளின் ஒரு பக்கத்தில்
அடைத்து வைக்கப்பட்ட
எங்களின்
அழுகையொலியும்
அருகதையிழந்த மக்களின்
குருதிச் சாயமும்
கோரத்தனத்தின் குரூரமுமே
மிஞ்சிக் கிடக்கிறது

எடுத்தவர்கள் எவராயினும்
காணாமல் போனவர் சங்கத்தில்
காட்டிப் பதியுங்கள்
எங்களின் இருப்பையும்
எங்களின் இழப்பையும்
காணாமல் போவதற்குள்!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனல் மழை

நேற்று எரித்துப் போன
ஆயிரமாயிரம் அனல் குண்டுகளின்
அகோரத்தனத்தின்
உட்காயம் மறைவதற்குள்
ஆழப் பொழிகின்ற அடைமழையே
நில்!

என் சுவாசக்காற்றே - மழை
முகிலின் இடுக்களில் புகுந்து
தாழமுக்கத்தை தகர்த்தெறி
கருமுகிலை
அள்ளி ஒளிவீச வழி எடு
ஏற்றிப் போகட்டும் வந்த
வான் மழை நீரோட்டம்

வாவிகளும் களப்புகளும் வழமைக்கு
வரட்டும்
வயல்கள் வடிவம் பெறட்டும்
தேசத்துக்குரிய மக்கள்
சாகிறார்
உன்னால் நோகுகிரா - இளம்
சந்ததி வாடுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு இல்லாமலும் - உடுபுடவை
இல்லாமலும்
எப்பாடு படுகிறார்
ஏன் மழையே தெரியலையோ?
சற்றேனும் தளர்த்து - என்
சந்ததி தழைக்கட்டும்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிதாமகன்

அடங்கிக் கிடக்கின்றேன் சிறையினிலே
ஆற்றமுடியாத வேதனையோடு...
எனைத்தேற்றிய
நீங்களும் போனதெங்கே...?
தேம்புகின்றேன் வந்திங்கு
துயர்துடைப்பீர்....

உயிர்தந்த நீங்களிங்கு
உறங்குகின்றீர் ....
உறங்காமல் இருக்கின்றேன்
கணமொன்றும்
சிறப்போடு வளர்த்த சிந்தையிலே
சிந்துகின்ற கண்ணீரும் முடியவில்லை....

வந்திருந்து
அழுகின்றேன் விழியுங்கள் அப்பா
வலிக்குது என் நெஞ்சம்
எழுந்திருங்கள்...
சொட்டுச் சொட்டாய் விழுகின்ற
கண்ணீரில்
எந்தன் செங்குருதி தானப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிகிறது.....எங்கிருந்தாலுமப்பா (அப்பா)

என்துணை நீங்கள் தான்...

அடையட்டும் சாந்தி

உங்களுயிர்...

அடையட்டும் சாந்தி உங்களுயிர்!...

*தந்தையின் இறுதிச்சடங்கில்*

கலந்து கொண்ட போது

18-02-2012





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளனானால்

எழுத்தாளனைப் பற்றி எழுதுவேன்
அவன் - எழுதியவற்றை அல்ல
எழுத மறந்ததை
என்னைப்பற்றியும் எழுதுவேன்
ஏன் இவ்வளவு காலமும்
எழுதவில்லை என்பதையும்
எழுதுவேன் - நான்
ஊடகவியலாளனானால் ......

ஊடக சுதந்திரத்தை
எழுதமாட்டேன் - ஆனால்
அடக்குமுறையை எழுதுவேன்
அதற்குரியவனைப்பற்றி
முழுசாக எழுதுவேன்
முழுக்க முழுக்க எழுதுவேன் - நான்
ஊடகவியலாளனானால் .....

உறவுகள் உண்ணாமல்
இருப்பதை எழுதாவிட்டாலும்
காணாமல் போன உறவுகளை
கண்டுபிடிக்க எழுதுவேன்
தொலைந்தவர்களைத் தொட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைந்தவர்களைப் பற்றி
தொகையாக எழுதுவேன்
நான் ஊடகவியலாளனானால்

அவசரமாய் எழுதுவேன் - ஆனால்
அவசரகாலச் சட்டத்தை அல்ல
அது செய்த அட்டகாசத்தை
அணுஅணுவாய் எழுதுவேன்
அயல்நாட்டைச் சாடி எழுதுவேன்
அவைகள் செய்த
நயவஞ்சகத்தை
நாசூக்காக எழுதுவேன் - நான்
ஊடகவியலாளனானால்

பங்கரவாதியைப் பற்றி
பகிரங்கமாக எழுதுவேன்
பாரினில் தமிழன் படும்
வேதனைகளை எழுதுவேன்
ஆனால் .....
நான் எழுதிமுடிக்குமுன்
எனக்கு எழுதிவிடுவார்கள்
இரங்கலுரை - நான்
ஊடகவியலாளனானால்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்கள் சொன்னவை

நித்திரையின்றி
நித்தமும் துடிக்குமென்
கண்கள் - பல
சித்திரைகள் கடந்தும்
கம்பிக்கூட்டு வாழ்வில்
விடியா வினாவாகவே
விளைகின்றது.

என்னிரு கண்கள்
எனக்குரைக்கின்றது..
அருகருகே நாமிருந்தும்
அரவணைக்க முடியவில்லையாம்
அதுவும் சரியென்று
ஆறுதலாய் நானின்று
தனிமையாயிருக்கிறேன்.

உதயன் - சூரியகாந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலர்தினம் - 2013

கரை தொடும் அலைகளாய்
அடிக்கடி அன்பால்...
எனைத் தொட்ட என்னவளே - உன்
நினைவுடன்...
தொட்டுச் சென்ற அலையின்
தொடுகை சுமந்தபடி
கற்பனையில்...

ஆறாவது ஆண்டு
காதலர் தினமும்
மாறாத ரணமாய்...
அடைபட்ட கூண்டினுள்
அகப்பட்டுக் கொண்டது!
ஏழாவது ஆண்டிலேனும்
எமக்கொரு வழி பிறக்குமா?
இறைவா சொல்லு பதில்!

மித்திரன் வாரமலர்
01.09.2013




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வூட்டிய வன்னி மண்

உணர்வூட்டிப் பிறந்தேன் - நான்
தென்பகுதியின் தென்னை...
முக்கோண வலயத்தில்
அரங்கேறியது கலவரம்
எண்பத்தி மூன்றில் - எரிந்தது
வீடுகள் மட்டுமன்றி
அவர்கள் உணர்வுகளும் - அதில்
எம் வீடு ஒருமுறை அல்ல...
இருமுறை - ஆனால் எரியவில்லை
என் உணர்வுகள் மட்டும்

அடைக்கலம் தந்தது....
தாயில்லாப் பிள்ளையும் வாழும்
வன்னி மண்
துணைவியை தந்தது
வடமராட்சி மண் - அவள் ...
துணையோடு - பிறந்தாள்
அன்புமகள்
காவியா எனும் கம்ஷா
உயிர் காக்கும் ஊர்தியில்
உண்மையுடன் உழைத்தேன்
தமிழ் உறவுகள் போற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் வைத்தனர் கயவர் - என்மீது
கனகாலமாய்
கனிந்தது காலமென
தீட்டினர் இரகசிய திட்டம்
மாட்டினார் என்னை
பயங்கர சட்டத்தில்

இன்றும் இருக்கின்றேன்
இரும்புச் சிறையில்
சிறகொடிந்த பறவையாக - தினம் தினம்
சிந்திக்கின்றேன்.
இந்த நிலை எவ்வளவு காலம்
தொடரு என.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கையும் மனிதரே

அருகருகே இருந்த போதும்
அடிநாள் முதலாய்
இந்த ஆண் வர்க்கம்
பெண்ணை
கர்ப்பம் சுமக்க மட்டும்
கை குலுக்கி வரவேற்கும்
உற்பத்தி உறவுகள்
ஒதுக்கித் தான் வைத்திருக்கும்
ஏனிந்த எதிர்ப்பரிணாமம்?
பெண்ணினத்து வரலாற்றில்
பட்டுப்பூச்சிகள் - ஏன்
கூட்டுப்புழுக்களாய்
குறுகிப் போகின்றன...
பாவம் மனைவி
இந்த இல்லற
கிரிக்கெற்றில்
கட்டிலறைக்கும்
சமையலறைக்கும்
ஓட்டங்கள் எடுத்தெடுத்தே
ரணமாய்ப் போனாள்
இன்னும் ஆண்களுக்கு
இது ஏன் புரியவில்லை?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதனை

வெள்ளை உடைதரித்து
வேதனையில் வாழ்கிறேன்
சோதனைகள் வந்த போதும்
சோராத எந்தன் மனம்
என்னினத்தின்
கலாச்சாரம் பண்பாடு...
கலையப்பட்டதை கண்ட போது
வெளிவராத கண்ணீருடன்
வெந்து போனது!.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரம் கொடுங்கள்

அனர்த்தங்களால்
அகதிகளாகி
நிலம் பிரிந்து புலம் பெயர்ந்து
இனத்தின் நினைவுகளோடு
இன்றும் குரல் கொடுக்கும் - எம்
புலம்பெயர் உறவுகளே!

பூக்களை விட்டு புகழிடம் சென்று
உடலுடன் உள்ளமதை
ஊனமாய் உருக்கி
பயணத்தால் கண்விழித்து
பனி வெயில் பாராது
பகலிரவாய் பாடுபட்டு ....
நிலத்து உறவுகளுக்காய்
நித்தம் சிலுவை சுமக்கும் - எம்
புலம்பெயர் சொந்தங்களே!
ஆயிரம் வந்தனங்கள்
உங்களுக்கு உரித்தாகுக!

ஊரிழந்து உறவிழந்து
வெளியேற வழியின்றி
சில நூறு சொந்தங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறையிலிருக்கின்றனர்
கம்பிக் கூண்டுக்குள்
பெட்டிப் பாம்பாய்
குந்தியிருந்து எழுதுகிறேன்!
இரும்புத்திரை விலக்கி - எம்
இருப்பை உறுதி செய்ய
கரங்கொடுங்கள்
புலம் பெயர் சோதரரே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணி

அன்று...
மணிக்குப் பணிந்தேன்
பள்ளியில் பாடம் கற்பதற்கு
இன்று....
மணிக்குப் பணிகின்றேன்
சிறையில் வாழ்க்கைப் பாடம்
கற்பதற்கு!
கற்றது கை மண்ணளவு
கல்லாதது உலகளவு - என்ற
அரும்பதத்தின் அர்த்தத்தை
புரிந்து கொண்டேன்
நன்றாய்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியர்வை

நெற்றி வியர்வை
நிலத்தில் சிந்தி
நித்தமும் உழைத்து
அத்தையவள் பெண்ணையும்
முத்தான பிள்ளைகளையும்
சொத்தாக நினைத்து ....
கொட:டும் மழையிலும்
கொழுத்தும் வெயிலிலும்
எஜமானின் - மனம்
கெட்டு விடாமலும்
நாளின் எட்டு மணித்தியாலம்
சிட்டாகப் பறந்து
பற்றாக உழைத்து
பார்போற்றவாழ - நான்
படாத பாடுபட்டேன் ஐயா!

கூடினார்கள் தொழிற்சங்கம்
நாடினார்கள் எஜமானை
கோரினார்கள் சம்பள உயர்வு
ஏழைக்கு சிம்மாசனம்
எஜமானுக்கு சிம்ம சொப்பனம்
முடிவெடுத்தது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளிமார் சம்மேளனம்
வாழ்க்கைச் செலவு அதிகரிக்க
வாழ்வதா? சாவதா என
வறிய மக்கள் வாடி நிற்க
கூடி நின்ற மக்களை நாடி
வேடிக்கையாக
பல கோடிக்குச் சொந்தமானவர்கள்
கேட்டார்கள்
வேலை வேண்டுமா? வேதன உயர்வா?

ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க
தெருக்கோயில் மணி
ஓங்கி ஒலித்தது
அதுவே எஜமான்களுக்கு - ஒரு
எச்சரிக்கை மணி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து மழை

என் ஆசை மகளே!
மூத்த பெரியோரை
முன்நிறுத்தி செயற்படுவாய்
இரு முதுகுரவர்
இட்ட வழியில்
மும்மல மழித்து - நீ
முன்னேறு மகளே!

நொந்து கிடந்து
நொடிந்து தவிப்பதில்
கிடைப்பதொன்றுமில்லை
சிந்தை மகிழ்ந்து
சிறகை விரித்து
விந்தைகள் நிகழ்த்து - என்
அன்பு மகளே !

வல்லிபுர ஆழ்வார் - நல்
வரமருள
தேர்ச்சிகள் பெற்று....
தேர்வுகள் வென்று
பாராட்டுப் பெற்று
பார் போற்ற நீயும்
பல்லாண்டு வாழ்க - என்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாச மகளே!

வளமான வடக்கின்
பொங்கும் புதுப் புணலாய்
சிங்க நடைபோட்டு
மங்கையே நீ வாழ்க!
கலங்கரை விளக்கம் போல்
அன்னையுன் அருகினில்
அரவணைக்க காத்திருக்காள்
அடைப்பட்ட கூண்டிலிருந்து
அப்பாவின் - இனிய
வாழ்த்து மழை!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துப்பாக்கி ....

துப்பாக்கியால்
துயரப்பட்டு
துர்ப்பாக்கிய நிலையில்
தமிழனெதிர் காலம்!

இளைய தளபதியின்
துப்பாக்கியால் - இன்று
குடாநாட்டு இளசுகள்
கொண்டாட்டம்
பெற்றோர் வீட்டில் திண்டாட்டம்
திரையரங்கு முன் - மது
வெறியாட்டம்
பெண் பிரசுகள் - பாதையில்
தடுமாற்றம்!

மூத்த தளபதி
முளைத்த
ஊரில்
இளைய தளபதிக்கு
இளைஞர் சங்கம்
கட் அவுட் அடித்து
கெட் அப் போட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேடு கெட்டுப் போகும்
இளசுக் கூட்டம்!

பாலா பிஷேகம்
பூவா லபிஷேகம்
பாமரன் வீட்டில்
பல நாள் சோறில்லை
பள்ளி போக புத்தகமுமில்லை
சின்னத் திரை
சினிமாத் துறை
சங்கத்தமிழை சாகச் செய்து
சாதனை இளைஞரை
சோதனை செய்கிறது.

இளைய சமூகமே
மோகத்தை துறந்து - தமிழ்
மானத்தை காத்து
தமிழனென்று சொல்லி
தலை நிமிர்ந்து நில்லு !

சுடர் ஒளி வார இதழ் - 2013
மார்ச் - 24


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பின் எல்லை

நானொரு அரசியற்கைதி
அதிலும் ஆயுட் கைதி
மனைவி மக்கள் தொலைவில்
நானோ இரும்புச்சிறையில்
நகமும் சதையும் போலிருந்த
நண்பரெலாம்
நாளடைவில் நகர்ந்துவிட
நம்பிய சொந்தமெலாம்
நடலையுடன் நழுவிவிட
பெற்றவளின் பாசம் மட்டும்
பொறியளவும் குறையவில்லை.

வறுமையில் வாடுமென்
உடன் பிறப்புக்கள்
வன்னிமண் கொடுத்த
வரலாற்று வரமல்லவா
போரின் வடுவாய் - எம்
ஈழமண்ணின் பரிசாய்
வெள்ளையுடை
நான் தரித்து
வேதனையில் வாடுகிறேன்
என்னோடு முடியவேண்டும்
என்போன்றவர்
துன்பங்கள்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் நாம்

அம்மாவும் உம்மாவும்
அயல்வீட்டு அன்னையர்...
அக்காவும் தா(d)த்தாவும்
கல்லூரி நண்பிகள் ...
காக்காவும் அண்ணாவும்
அரசியல் உறவுகள்...
அப்பாவும் வாப்பாவும்
அம்பாரைச் சந்தையில்
அங்காடி நட்புகள் ...
இப்படி இருக்கையில் - ஏனிந்த
பிரதேச வாதம்
பிரிவினை வாதம்!
தமிழ் பேசும் நாணா - நீரும்
சிறுபான்மை தானே!
சேர்ந்தமைப்போம் ஒற்றுமை
சார்ந்திருப்போம் மக்களை!

*தினகரன் வாரமஞ்சரி*
29.09.2013


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரும்புக்கதவுக்குள்ளிருந்து..

புணர் வாழ்வு போகும்
சிறைத்தோழா - உன்
முகவரி எனக்குத் தருவாயா?
நானும் புணர்வாழ்வு....
பெறுவேனா?
எனக்கோர் மறுவாழ்வு
கிடைக்காதா?
அரசியல் சூழ்ச்சிகளாலே - இன்று
அடைபட்ட கூட்டினுள் நானே!
புணர்வாழ்வு போகும்
சிறைத்தோழா - என்
நிலையினை ...
உறவுக்குச் சொல்வாயா?
விடுதலையுன்னை
அணைக்கட்டும் - உன்
வீட்டினில் சந்தோசம்
பரவட்டும்!
அம்மாவை நீயும் கண்டால்
அடைபட்ட சிறையிலென்
அவலத்தை நீயும் சொல்லாதே!
அழுவதற் கவளிடம்
அரைத்துளி கண்ணீரும் இருக்காது!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புணர்வாழ்வு போகும்
சிறைத்தோழா - என்
செல்ல மகளிடம்
சின்னதாயொரு மடல்
சிறைக்கனுப்பச் சொல்வாயா?
சிறையிலக்கம் நீயும் அறிவாயா?
ஆண்டவன்
துணைநின்றால் நானும் - என்
ஆயுளை வென்றிடுவேன் தானே!

புணர்வாழ்வு போகும்
சிறைத் தோழா - என்
நண்பரை நீயும்கண்டால்
எனக்காய் நீயே நலன் கேளு!
இரணைமடுத் தாயும்
இரக்கப்படுவாளா?
இரும்புக்கதவும் எனக்காய்
திறக்கப்படுமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணி தீர்க்கும் பெருவிருட்சம்

இன்னார் இனியார்
என்றிலாது
பிணி தீர்த்து உயிர் காக்கும்
பெரு விருட்சமாம்
கிளி/ மாவட்ட பொது
மருத்துவமனை
பணியோங்கி ...
பல்லாண்டு வாழ்க!

பலமான கிளைகளாய்
ஈடிணையற்ற எம்
வைத்தியரும் ...
தாராள மனம் கொண்ட
தாதியரும்...
மகத்தான பணி தொடரும்
மருத்துவப் பணியாளரும்...
ஈவொழிச்சலின்றி
உயிர்காப்பு
ஊர்தியோட்டுனரும்
இணைந்த சேவை லிகிதர்களும்
ஒருதாய்ப் பிள்ளைகளாயிணைந்து
ஒப்புயர் சேவையினை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பாமல் தருவிக்கும் - எம்
மருத்துவசாலை
பணியோங்கி....
பல்லாண்டு வாழ்க!

போரின் எச்சமாய்
நோய் நோம்பலென்று வரும்
நாடு நகர் மக்களுக்கு
உடற்கூற்றுடன்
உளவியலும் உவந்தளித்து
பால் நினைந்தூட்டும் தாயாய் ..
வெறுப்பின்றி பணி செய்யும்
வன்னி மாநகரின்
வளமான வைத்திய வாசம்
பணியோங்கி...
பல்லாண்டு வாழ்க!

மருத நிலத்தென்னைகள்
மா பலாக்கள்
மருவி நின்று பயன்தரும்
எழில் மிகு சாலையாம்
எங்கள் வைத்திய இல்லம்
வளம் பெற....
பக்கபலமாய் நின்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்க பயனளிக்கும்
பிராந்திப் பணிமனையும் ..
மக்களுயிர் காக்கும்
மலேரியா தடைப்பிரிவும் ....
தாயுடன் சேயும்
திடமாக திகழ ....
சுகாதார வைத்தியமும்
குன்றின் மேலிட்ட விளக்காய்
நிறையுணவு பயனளிக்கும்
வைத்தியசாலை பணியோங்கி
பல்லாண்டு வாழ்க!

நான் பணிபுரிந்த பசுஞ்சோலை
நினைவில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கையடக்க காதல்

ஹலோ!...
மறுமுனையில்
அவளது குரல்
அழகாய் இனித்தது....
இளமைக்கு
இதமாயிருந்தது. ...
உணர்ச்சிகள் தாண்டி
உடல் உருக்குலைந்தது....

இளமைச் சூட்டை
இனி தணிக்க வேண்டும்
இல்லையேல்
நரம்புத் தளர்ச்சி
நாளை வரலாம்
கற்பனை மருத்துவன்
அவனானான்.

ஆர்ப்பரித்த உணர்வலை
அடங்கியயொழிந்தது
இப்படியே எத்தனை நாள்?
என்னையே நான் மட்டும்
பற்பல எண்ணங்கள்
அவனுக்குள் அலை மோதின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளிடம் வினவினான்
அவளுக்கும் அப்படியாம்
பிறகேன் பிதற்றுவான்
கைப்பேசிக்கு
விடையளித்து
கைபிடித்தான் திரைமறைவில்
கட்டியணைத்தான்

ஆசை அறுபது நாள்
மோகம் முப்பது நாள்
தேனாக இனித்தவைகள்
திகட்டத் தொடங்கியது
காரணங்கள் பலகூறி
தட்டிக் கழித்தானவன்
திட்டித் திரிந்தாளவள்

வார இதழில்
நல்ல வரன் தேடி
மணமகன் பதவிக்கு
விளம்பரமிட்டான்
அவளோ!
கட்டாய வாழ்வுக்கு
கட்டுண்டு
இன்னொருவன் மனைவியாய்
இல்லறம் புரிகிறாள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கைதி நான்

கொஞ்சமேனும்
அழுதால் தான்
மனதினில் கனமின்றி
கம்பிக்கூட்டுக்குள்
கால் மடக்கி - நான்
படுக்க முடியும்

தினந்தினம் திசைமாறி
அணுவணுவாய் அனுபவிக்கும்
ஆறாத்துன்பங்கள் அழிந்து போக
சிறுதுண்டு கயிறுபோதும்
ஆனாலும் தடுக்கிறது
பிள்ளைப் பாசம்
தடுமாறுகிறேன்
தமிழ்க் கைதி நான்.

தினக்குரல் பத்திரிகை
29.09.2013





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பு(ப)கை வேண்டாம்

புகைக்காதே தம்பி
புகைக்காதே
புகைத்தபின் ஈரலை
இழக்காதே
தன்னாலே - புற்று
நோய் வரும் புகைக்காதே
சுருள் புகை நீவிட்டு
திரியாதே
சுற்றத்தார் சுவாசிக்க வைக்காதே
நீ தினம் புகைப்பது
"நிக்கொட்டின்" நஞ்சென்பதை
அறிவாயா?

சந்தியிலே சிலர் சொல்வர்
சிகரெட்டின் ரசனையினை - நீ
சாவதற்கு வழிகாட்டும்
சாவாசங்கள் தேவை தானா?
பியர் அடிக்கா வாழ்வும் வாழ்வா? - என
வள்ளுவனையும் கொலை செய்வார்
வசப்படாதே!
விட்டுத்தள்ளு
பிள்ளைகுட்டிக்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகையிலையை

விட்டுத்தள்ளு

வெற்றிலை பாக்குடன்

போதைப் பொருளையும்

விட்டுத்தள்ளு!

2012 ஜீன் 26. உலக போதைப் பொருள்
ஒழிப்பு தினத்தில் பரிசு பெற்ற வரிகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய தலைவர்கள்

சிறுவரில்லமுமில்லை
செஞ்சோற்றுக்கடன் கழிக்க
செந்திமிழனுமில்லை
சொந்தமுமில்லையம்மா
செங்குருதி சுரந்து தந்த
நீயுமில்லை
எங்கம்மா போவேன்
எனக்கொரு கையுமில்லை
தங்க ஒரு தாவாரம் சேர்வேன்
மனக்கணக்கு பாத்துத்தான்
மணிக்கணக்கில்
நடக்கின்றேன் - பழந்துணி
நானுடுத்து
பாதைவழி படுக்கின்றேன்
வெடுக்கெனச் சுடுகின்ற வெயிலிலும்
அடுக்காய் பொழிகின்ற
அடை மழையிலும் பனியிலும்
நுனிப்புல்லாய் நனைவேன்
இனிப்புக்காய் ஒரு கடையில்
இருக்கின்ற ஒரு கையை
இவர்களிடம் நீட்டி
பிஞ்சு நான் நோக்க
நெஞ்சினிலே உதைப்பார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவாடை கட்டுமென்னை
ஏழனமாய் பார்ப்பார்கள்
இருக்கின்ற இடத்திலே தான்
எச்சிலையும்
துப்புவார்கள்
பிச்சைக் கிண்ணத்தையும்
பிடுங்கி எறிவார்கள்
கந்தையை கழற்றி இச்சை செய்வார்கள்
எனக்கேன் இந்த நிலை
பாலூட்டிய உன்னையும்
பக்குவமாய் வளர்ந்த என்னையும்
வேரோடு
பிரித்ததம்மா வீணப்போர்

பாட்டும், கூத்தும்
பாடப்புத்தகங்களும், இயலிசை நாடகமும்
எனக்கான சிரிப்பையும்
இருப்பையும் யார் தருவார்,
ஊரோடு உல்லாசம் யார் தருவார்?
எனக்கென்று துணை நாடி
எவர் வருவார்
ஈனப் போரை நிறுத்துங்கள்
பேராளர்களே
நாங்கள் தான்
நாளைய தலைவர்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேட்கவில்லையா?

கால் நீட்டியமர்ந்து -கொஞ்சம்
சத்தமாய் கொட்டாவி விட்டு
சோம்பல் முறித்த - என்
சொந்த வீடு கேட்கவில்லையா...
நான் எங்கே யென்று?

நா சுவைக்க நீர் குடித்து
களை நீங்க தலை குளித்த - என்
கட்டுடைந்த கட்டுக்கிணறும்
சிறுநீர் கழிக்க
விருப்பமாய் போகும் - கிழுவை
வேலியோரமும்
வீட்டுக் கோடியும் கூட
கேட்க வில்லையா....
நான் எங்கே யென்று?

நிலவு காட்டி - எனக்கு
அமுதூட்டி
அம்மா நடந்ததும்
தும்பு முட்டாஸ் நான்கேட்டு
அடம் பிடித்து
அழுது புரண்ட - நம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு முற்றமும்
கேட்வில்லையா...
நான் எங்கேயென்று?

அயல் வீட்டு
உதயா, வசந்தி, சாந்தி
அன்ரியவையும்
உண்மையா கேட்டகவில்லையா....
நான் எப்படியென்று?
ஓ...
மறுக்கப்பட்ட உரிமைபோல்
இவையளும் - என்னை
மறந்து விட்டன(வா)ரா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர் காலம் ???

சாட்சிகள் இல்லாத
ஊமைகளின் வழககில
ஆஜராகத் துடிக்கும்
அவசரத்தோடு
சட்ட வல்லுனர்கள் ...

அலுமாரியில்
அமைதியாய் கிடக்கும்
குற்றமிழைக்காத
குற்றவாளிகளின்
குற்றப் பத்திரிகை ....
மறக்காமல் எடுத்தார்
கறுப்புக் கோட்டையும்
வெள்ளைக் காரின்
திறப்புக் கோர்வையையும்
மன்று வாயிலில்
மக்கள் கூட்டம் ....

சேர்...வாறார்....
சேர்... வாறார்....
மதிப்பகலா முனுமுனுப்பு
"கொடுத்தால் தான் கதைப்பார்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்க்குல மத்தியில்
தடல் புடல் தேடுதல்....
கைப் பையினுள் !

வாழப் புகுந்த கனவான்களும்
விடலைப் பருவ இளசுகளும்
கைவிலங்கு தொடரணியில்
காவல் துறை கண்காணிப்பில் ....
கம்பிக் கூட்டுப் பேரூந்தில்
காலத்தின் கோலத்தால்
அரசியல் கைதிகளாய்
அல்லற்படும் இவர்களின் ...
எதிர்காலம்....???


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சு வார்த்தை

ஆண்டுகள் பல கடந்தன.
அரசுகள் சில மாறின - ஆனால்
மாறவில்லை இன அழிப்புமட்டும்
பேச்சுக்கள் பல மேசைகளில்
வட்டமேசை சந்திப்பு
நீட்டு மேசை மாநாடு
ஆகிய தொன்று மில்லை -ஆனால்
கடலுணவுப் பொரியலும்...
போத்தல் தண்ணீரும்
தீர்ந்தது தான் மிச்சம்

தூதுவர்கள்
பல நாட்டவர்கள் - எம்
மண்ணை நோட்டமிட
சில நாட்டவர்கள்
ஓட்டினார்கள்..
"ஏசி" வாகனம்
வடக்கிற்கும், தெற்கிற்கும்.
கடைசியில் - தண்ணி
காட்டினார்கள்
தமிழ் மக்களுக்கு!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணாவுக்கொரு
# கண்ணீர் மடல்

அண்ணா சச்சண்ணா
எப்படியண்ணா இருக்கிறாய்?
உன்னை பற்றி
எண்ணாத நாளே இல்லை
அம்மாவும் அக்கராயன் வந்து
அடிக்கடி அழுவதாய்
அவ பொழுது போகிறது
ஆதரிக்க என் அண்ணா
எப்போ நீ வருவாய்?

கவலைப்படாதே
சச்சண்ணா
காலை மாலை வேளையிலே
கடவுளை வேண்டுங்கள்
உன்னைப் பார்க்க
வருவதற்கு - என் கையில்
பணமில்லை
அதனால் - வரைகின்றேன்
கண்ணீர் மடலை
கண்கலங்கி நானும்....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனின் கொடை

மாற்று வலுவைப் படைத்தாலும்
இறைவன் - அவர்கள் வாழ்வில்
சிறந்திட வேண்டுமென
வேற்றுத்திறமை அளித்தான்
மனிதனுக்கு ஊனம் என்றால்
அது அவன் மனதில் இருப்பது
உடலில் இல்லை
எதையும் தாங்கும் இதயம் கொண்ட இவர்கள்
மலையைச் சரிக்கும் வலிமையான....
மனம் படைத்த மானிடர்

இயற்கை அவர்கள் துணிவு
செயற்கை அவர்கள் திறமை
அவர்கள் படைக்கும் சாதனை
நிலைக்க வேண்டும் பாரினில்
கொடிய போரினால்
கிடைத்த பரிசு தான்
இறைவனின் இந்தக் கொடைகள்.



*உலக மாற்றுத்திறனாளிகள்*
*தினம் 2010ல் சான்றிதழ் பெற்றது*
*- அனுராதபுரம்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் பண்டிகை - 2009

கிரேக்கத்தில் ஆரம்பித்த
கிறிஸ்மஸ் பண்டிகையை
கொண்டாடி முடிய...
சென்ற ஆண்டு - ஆழிப்பேரலை
தின்றாடி முடிந்தது.
இவ்வாண்டு பண்டிகையை
கொண்டாட முடியாமல் - மக்கள்
திண்டாடுகிறார்கள்
அன்றாட தேவைக்கே
அரிசி கூட இல்லாமல்
கூட்டுறவு சங்கத்தில் - மக்கள்
கூட்டமாக வாடி நிற்க
வட்டமடித்த வான் கழுகு
கொட்டியது குண்டுகளை

பட்டினியால் பண்டிகையை
கழித்தாலும் பரவாயில்லை
பயமின்றி படுத்துறங்க
வழியின்றி
கழிகிறது இவ்வாண்டு
நத்தார் பண்டிகை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியதோர் பிறப்பிற்காய்

வசந்த காலமும்
வரண்ட காலமாய்
உருண்டு போகும்
மனிதன் நான்!
துயர மையில் தோய்ந்த
ஆண்டுகள் ஆறு....
விழியோரத்தில்
விழுந்த துளிகளில்
அமிழ்ந்து போகிறது!

பொறுத்திருக்கிறேன்
பொறுமையாய்
பொறுத்திருக்கிறேன்
துயருறும் பொழுதுகளில்
இறைவனை....
துணைக்கழைக்கிறேன்!

சிறையின் கறுமையரையில்
மூச்சுத்திணற
மூழ்கியெழுந்து
நம்பிக்கையுடன்
காத்திருக்கிறேன்
நாளைய விடியலில்
எனக்காகவும் - ஒரு
சேவல் கூவும் என....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுப் புயலின் அனுபவ வரிகள்

ஈழ மண்ணில் - ஒலித்த
அறிஞர் அப்துல் கலாமின்
அனுபவ வரிகள்
“நீ
கடின உழைப்பாளியாகவும்
இலட்சிய
தாகமுடையவனாகவும்
இருப்பதால் - உனது வெற்றியை
யாராலும் தடுக்க முடியாது”
நாளைய அறிவுலகின்
அத்திவாரமாம் - யாழ்
பல்கலையில்
ஓங்கியொலித்தது. ....

கேட்பதற்கு மட்டுமல்ல
எம்மினத்தைக் காப்பதற்கும்
இளைய சமூகமே
விழித்தெழு
அறிவால் அடையமுடியாதது
ஒன்றுமில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலமெலாம் எம் குரல்

ஓங்கியொலிக்கட்டும்

அணிதிரள்வாய்

அறிவுச் சமூகமே.

அறிஞர் அப்துல் கலாம் அவர்கள்
யாழ்ப்பாணம் வந்தமைக்கான
நினைவு வரிகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னவளே சியா

எப்போதும்
சிரித்திருக்கும் - உன்
பொன் வதனம்
என் காவியம்
பெண்ணழகை
மெருகூட்டம் - உன்
கருங்கூந்தல்
ஆயிரம்

ஈரமான
உன்னுள்ளம் - என்
கவிக்கு
உரம் சேர்ப்பது
திண்ணம்
புத்தியில்
தெளிந்திடும்
தத்துவம் - என்
வாழ்வை
நெறிப்படுத்தும்
புத்தகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவள் மனதின்
கம்பீரம் - என்
இதயம் பாடிடும்
சங்கீதம்
ஓயாத - உன்
சிந்தனை
என் விடுதலைக்கு - நீ
பாடிடும் வந்தனை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமையின் கொடுமை

சுற்றுமதிற்
சுவர்களுக்குள்
தனிமை சோகமானது
கம்பிக்கூட்டுக்குள் - என்
சிந்தனையின் நடமாட்டம்

குடித்தகுறைபீடித்
துண்டகளுள்
குப்பைக் கூடையின்
எச்சில் மணம் - என்
மூச்சுக்குள்
சிக்கித் தவிக்கிறது....
இடமில்லா நெருக்கடி
நெஞ்சுக்குள் அடைக்கிறது.

நிம்மதியாய் உறங்க - நான்
நினைக்கவில்லை
வடதிசையில்
மனைவியுடன் மகளும்
அப்பாவின் நினைவினில்
திடுக்கிட்டு எழும்புவதால்...
அல்லோலப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிறையில்

நான் மட்டும்

அழுது கொண்டிருக்கிறேன்.

ஆயுள் கைதியாக.

*தினக்குரல் பத்திரை*

17.08.2013





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய சமூகமே

என் வன்னி நிலத்தின் மேல்
இனிக்கும் காதல் எனக்கு
நடை வண்டி தள்ளி
நான் விழுந்த போது - என்
புனித பூமி தானே
பூந்தொட்டிலாய் ஆனது!
ஈழுப்பருவ மங்கையவள்
இன்பக் காதலை சொல்லும் போது..
நாணச் சுமையால்
நாணிக் குனிந்த தேயன்றி
இன்னோர் தலை குனிவை
இந்த மண் கண்டதில்லை!

இற்றை நினைத்தால்
இதயம் வலிக்கிறது....
இளசுகளின்
முறையற்ற கருக்கலைப்பு
மூத்தோரை அவமதிப்பு
செல்போனின் தொகை அதிகரிப்பு
நாகரீகத் தோரனையில்
நாள் தோறும் மது குடிப்பு
மங்கையும் அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணாகிப் போகிறாள்!
மாண்டவர் மாண்டவர் தான்
தமிழ் மானம்
மரணிக்கவில்லையே
இளைய சமூகமே
எண்ணிப்பார் - உன்
மூத்த குடிகள்
பார் போற்ற வாழ்ந்த பரம்பரை மண்ணல்லவா?
பலி கொடுக்கலாமா - தமிழ்
பண்பாடு கலாச்சாரத்தை....?

*தினகரன் வாரமஞ்சரி*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடக அலை சத்தியமூர்த்தி

மன்னம்பிட்டி மண் தந்த
மகத்தான மைந்தனே
புண்ணிய மூர்த்தியின்
பொன்னான புதல்வனே
சத்தியமூர்த்தி..
உன்சேவை போதுமென்றா?
நீ சென்றாய்

சுகாதார துறையிலே
சுதந்திரமாய் - நீ
புரிந்த சேவையினை
மறந்தாலும் ...
சுற்றத்தார் நலன் பேண
சுடுச் சொல்லால் சுட்டு
வஞ்சகர்களின் நெஞ்சறையில்
எழுத்துச் சன்னத்தை
ஏற்றிய உன்னை
மறக்கத்தான் முடியுமா?

கவியென்ன கட்டுரையென்ன?
அரசியல் ஆய்வுரை என....
அனைத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகராதியின் அரிதான
அட்சரத்தை
ஆணித்தரமாய் - அகிலமெல்லாம்
அதிரவைத்த
ஊடக வீரனே....
முதன்மை எழுதுனனே!

எழுத்தாளன் எழுத அஞ்சியதை
மிஞ்சி, மிஞ்சி எழுதினாய் - ஆனால்
உன்னைப் பற்றி நானும்
அஞ்சி அஞ்சி எழுதுகின்றேன்
விஞ்சி எழுதினால்
பிய்ந்து விடும் எந்தன் நெஞ்சம்

எறிகணைக்கு இரையாகி
தேவிபுரத்தில் விதையாகிய
செந்நெறி மைந்தன் - நீ
சத்தியமூர்த்தி...
எம் மனதில் அழியாத
எழுத்தோவியமே...
உன்சேவை அழியாது
நிம்மதியாய் உறங்கையா,



எறிகணை வீச்சுக்கு இலக்காகி உயிர்துறந்த
ஊடகவியலாளர் பு. சத்தியமூர்த்தி நினைவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலை வெறி

வாகனங்களின் பெருக்கம்
வீதிகளில் நெருக்கம்
பயணிகள் கலக்கம்
சாரதிகள் மயக்கம்

விபத்துக்கள் அதிகரிப்பு
வீணான உயிரிழப்பு
தரமற்ற ஊர்திகளின்
தரமான புகைப்பு
தாரில்லா வீதிகளில்
தினம் புளுதி குளிப்பு

எண்ணெய் விலையேற்றம்
மக்கள் தடுமாற்றம்
வீதிகளில் ஆர்ப்பாட்டம்
வெகுஜனங்கள் போராட்டம்
பெருந்தெருவில் டயர் புகை
பொலிசாரின் கண்ணீர்ப்புகை

முப்படைகள் குவிப்பு
தொழிற் சங்கங்கள் தவிப்பு
காவல் துறையின் கடுகடுப்பு
கடைத் தெருக்கள் கதவடைப்பு
ஜனனாயகத்திற்கு ஓட்டுப்போட்ட
ஜனங்களுக்கு துப்பாங்கி வேட்(டு)டா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காத்திருப்பு

கம்பிக்கூட்டுக் காத்திருப்பு
காலத்தின் சுகமானது
எனக்கானவள்
எனக்காய்
காத்திருக்கும் வரை

கம்பிக்கூட்டுக் காத்திருப்பு
காலத்தின் பதற்றமானது
எனக்கானவள் பார்வை
என்னை நோக்காதபோது

கம்பிக்கூட்டுக் காத்திருப்பு
காலத்தின் சுமையானது
எனக்கானவள் நற்செயல்
எனக்காக இல்லாதபோது

கம்பிக்கூட்டுக் காத்திருப்பு
காலத்தின் மரண வலி
எனக்கானவள் பிரிவு
நிச்சயிக்கப்படும் போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பிக்கூட்டு காத்திருப்பு
காலத்தின் இனிமையானது
எனக்கானவள் நினைவு
எனக்காகவே உள்ளவரை

புரிந்து கொண்ட அன்பினால்
ஆயுள் வரை காத்திருக்கும்
ஆயுள் அரசியற் கைதி நான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலர் குணம்

தூதுக்காதல் தொலைத்து
கடிதக் காதல் கலைத்து
கணினிக் காதல் முளைத்து
இன்ரநெற் ஈ-மெயிலில்
நாளுக்கொரு காதலரை
நாசூக்காக நாகரீகமாக
மாற்றிக் கொள்ளும்
மனித சாயலில் விலங்குகள்

கணினி வகுப்பு
கடற்கரை பியர் அடிப்பு
கையில் பேசியுடன்
கறுப்பு பல்ஷர் பைக்கு
இன்றைய காதலரின்
கற்பனை வடிவம்
சங்க காலக் காதலோ...
காவியமானது
இந்த காலக் காதலோ....
நீதிமன்ற இதிகாசமானது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் பிள்ளையுடன்
படிக்காசை எதிர்பார்த்து
படியேறும் பரிதாபம்
இந்நாளில் எழுதுகிறேன்.
இனங் கண்டு கொள்வீரா?
காதலரே!

*காதலர் தினம் 2012 பரிசு பெற்ற கவிதை கொழும்பு*
*வலம்புரி பத்திரிகை - 22.09.2013*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதா (அ) பிமான சேவகன்

கண்டிப்புடன்
கடைமை நேர்மை
கற்பனைக் கெட்டாத் திறமை
எண்ணிய கருமம் யாவும்
இலகுவில் ஆற்றும் பாங்கால்
திடசித்த நெஞ்சங்கொண்டு
திறம்பட சேவையாற்றி
எம்மக்கள் இனிதுற
மருத்துவப் பணிகள் செய்தீர்.

ஆழிப்பேரலை
ஆர்ப்பரித்த காலமதில்
இரவு பகல் பாராது
சற்றும் சலிக்காது
துறைசார் பணியாளரை
அன்புக் கட்டளையால்
ஆட்கொண்டு
அனைவர்க்கும்
மகத்தான மருத்துவம்,
சுற்றுச்சூழல், சுகாதாரமென
சரியாகப் பராமரித்தீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிய போரின் கடினத்தால்
இடம்பெயர்ந்து.....
இன்னலுற்று வந்தோர் தம்மை
இன்முகத்தோடரவணைத்து
இறுதி யுத்தம் வரை - பல
எறிகணைகள் மத்தியிலும்
மக்களோடிருந்து
மருத்துவப்பணி தொடர்ந்து
“மனிதாபிமான மருத்துவர்” என்ற
உலக சுகாதார தாபனத்தின்
உயரிய விருதினைப் பெற்று
உயர்ந்து நின்றீர்.

மாற்றங்கள் பெற்று
எத்திசை சென்றாலும்
எல்லோர் மனங்களிலும்
ஏற்றமிகு இடம் பிடித்தீர்
சத்தியத்தின் சொற்பெயர்
தாங்கி நின்று
மக்களிடர் களைவதற்கு
மனமே கொண்டு
முகாமைத்துவத்தால்
அனைவரையும் கவர்ந்து
நீங்களாற்றிய சேவைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமெலாம் சிறந்திட
கம்பிக் கூண்டிலிருந்து
கணிசங் கொண்டு வாழ்த்துகிறேன்.

உலக சுகாதார ஸ்தாபத்தால் மருத்துவர்
த. சத்தியமூர்த்தி அவர்களுக்கு நெருக்கடிகால
மனிதாபிமான மருத்துவர் விருது கிடைத்தமைக்கான
வாழ்த்துக்கவி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி இருக்கிறார்கள்?

உங்களை காணாத கண்ணொன்று
கண்ணீர் சொரிகிறது
கன்னங்கள் பழுக்க கதறி அழுகிறது...
என்னினமே என் உறவுகளே!!
எப்படி இருக்கிறீர்கள்?
அன்னையில்லையாம் - அம்மாவோடு
குடும்பமே செத்ததாம் - அப்பா
காணாமல் போனாராம்
ஆவி துடித்தேன் !
ஆரத்தழுவிய கரங்கள் இல்லையாம்
ஆனந்தக் கண்ணீர் வடித்த
கண்கள் இல்லையாம்
ஊன்று கோலிலே உங்கள் கால்களாம்
விழுந்து எழுந்தேன்,

கொழுந்துகள் ஆடிய குதிரைகள் உடைந்ததாம்
உழுந்து வயல்கள்
உயிராய் எரிந்ததாம்
கோயில்களிலே ஆவிகள் வாழுதாம்
கொத்துக் கொத்தாய் கண்ணிவெடிகளாம்
எழுந்து விழித்தேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தபுரம்

சாயும்பொழுதுகள்

சாரலால் நனையுதாம்

கூடார வீடுகளில் குப்பி விளக்குகளாம்

கிட்டி விளையாடிய கிடங்குகளில்

முட்டி வழிகிறதாம் குருதி

எட்டி நடக்கின்ற இடங்களில் எல்லாம்

மூடி எரிந்த மீத எலும்புகளாம்

மரணங்கள் மலிந்த மரணச் சடங்குகளாம்

வாழ்வு சிறந்த வன்னி மண்ணில்

எத்தனை வேதனை? எந்தன் நெஞ்சில்

எழுதவே முடியல குமுறுது நெஞ்சம்

நலம் என்று சொல்ல

நாதியில்லாதவன் நெஞ்சில் தான்

எப்படியிருக்கின்றீர்கள் என்று

கேட்கிறது சுகம்!

எப்படியிருக்கிறீர்கள்?

நன்றி

அகத்தியன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தனான்

ஐ.சி.ஆர் சியும்

அரைவாசியாய் குறைச்சிட்டுது - அது

இருந்தாலும்

அவரைப் போய் பார்க்கலாம்.

அவசரப் படாதே மோனே...

ஆறுதலாய் யோசிச்சு

ஆரட்டையும் மாறிக் கொண்டு....

அவனப் போய் பாரடி பிள்ளை

ஓமண ஆச்சி - ஒருக்கா

சின்னவள கூட்டி வர

சிறுபள்ளி போகவேணும்

வரும் போது வசந்தியிடம்

கைமாறாய் கேட்டுப்பாப்பம்

கழுத்தில் இருப்பதை கழற்றிக் கொடுத் விட்டு

எண்ணத்தில் வந்தவற்றை

எண்ணிக் கொண்டு போகிறாள்



அவர் வ ந்தா....

அடுக்கடுக்கா இல்லாட்டியும்

அளவான செல்வத்தோடு

ஆனந்தமாய் வாழலாமெல்லே

ஆண்டவன் தான் காட்ட வேண்டும்

அத்தானுக்கோர் நல்வழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிப்பு

இரும்புக்கூட்டுக்குள்
விடுதலை தேடி
இழந்த நாட்கள் - மனதில்
நினைவுகளாய் நிமிர
கம்பியில் தடுக்கி விழுந்து
கவலையுடன் நிமிர்ந்தேன்
தடைகளாயிருந்த
தடங்களைத் தேடி
பயணிக்கிறேன்
மீண்டுமொரு விடுதலைக்காக

எங்கும் உற்றுநோக்கும்
கண்கள்
காக்கிச் சட்டைகளின்
நடமாட்டம்
விடியட்டுமென காத்திருந்தேன்
வீணாய்ப் போனது
பல இரவுகள்
காணாமற் போனோரின்
கணக்கிலில்லாத
கவிதைகளாய்
சுருண்டு விழுகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறிழைக்காது
தண்டிக்கப்படும் - நான்
தவறிழைக்கலாமா?
விழிக்கிறேன்
விடுதலை
காத்திருப்போம்..




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக உணவும் தினம்

உலக உணவு தினமாம் இன்று
ஆஹாநான் நினைத்தேன்
இலங்கை உணவு தினமென்று
தவறாக நினைத்துவிட்டேன்!

அதுதானே பார்த்தேன் - அன்று
ஆபத்தான நிலையிலும்
பட்டினியின் விளிம்பிலும்
பாலகர் வாடும் போதும் புதுமாத்தளன் மண்ணில்
புறமுதுகிட்டு நின்றார்கள் - உலக
உணவுத்திட்டத்தினர்

பாவம் அவர்கள் என்ன செய்வார்கள்
பாதுகாப்பு பிரச்சினைதான் காரணமாக்கும்
வீட்டுத்தோட்டம் செய்யச் சொல்லியும்
பட்டினிக் கெதிராகவும் - பல
விழிப்புணர்வுகள் செய்தார்கள்
பள்ளி முடித்து பாடம் செய்தோமோ
இல்லையோ!
வீட்டுத்தோட்டம் செய்து
விருதுகளும் பெற்றோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டும் பச்சரிசியும்
பணமின்றித் தந்தார்கள்

ஏன்தானோ தெரியவில்லை
முள்ளிவாய்க்காலில்
பச்சைத் தண்ணீர் கூட!
தரமுடியாமல் போனது
ஓகோ!
பயங்கரவாதியும் பாவித்துவிட்டால்?
என்ற பயமோ தெரியவில்லை....

பட்டினியில் பாதியை இழந்து
படுகாயத்தில் மீதியை இழந்து
பட்டதுயர் போதுமென்று
பாலகரை தோளில் சுமந்து
ஆனந்தகுமாரசாமி முகாம்
அண்மித்த போது...
பாதுகாப்பு வலயத்தில்
பயமின்றி நின்று...

கனத்த பையில்
கடலைப் பருப்புடன்
தறப்பாளும் தந்து - தயவுடன்
உலர் உணவையும் தந்தனர்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகா! ஆகா!!
அப்போது தான் புரிந்தது
உலக உணவு திட்டத்தின்
உன்ன(ா)த பணி
உணர்ந்து விட்டேன்
உண்மையை நான்

உலக உணவு தினத்தையொட்டி எழுதிய
வரிகள் - 2010





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புது + இன + பத்திரிகை

பத்திரிகை படித்தேன்
பாதிப்பக்கத்தில்
பாலியல் வல்லுறவு பற்றியது
அடுத்த இரண்டு பக்கத்தில்
அரசியல் அரியண்டங்கள்
மூன்றாம் பக்கத்தில்
முடிந்த முள்ளிவாய்க்காலின்
எச்சங்கள்!

நான்காம் பக்கத்தில்
இலங்கையும் ஈழத்தமிழரும்
நீண்ட கட்டுரை
எழுதியவர் யாரென எளிதில் விளங்காமல்..
ஐந்தாம் பக்கத்தில்
கடத்தலும் காணாமல் போதலும்
ஆறாம் பக்கத்தில் நூறு விபத்துக்கள்
கூடிய வேகமும்....
குடி போதையும்

ஏழாம் பக்கத்தில்
பாலன் பதிலும் புதுச் சினிமாவும்
எட்டாம் பக்கத்தில் குட்டிக்கதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தகராறும்
ஒன்பதில் வேறொன்றுமில்லை
பத்திரிகைச் செலவை
பத்திரப்படுத்தும்
பல விளம்பரங்கள்

பத்தாம் பக்கத்தில்
பதினொரு பேர் ஆடும்
துடுப்பும் சதமடிப்பும்
வாங்கியது வீணென
வருத்தப்பட்டேன்
மனைவி சொன்னாள்
வடகம் காயப்போடலாம்
வருத்தப்படாதீர்கள் என்று.

சுடர் ஒளி வார சஞ்சிகை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தகராறும்
ஒன்பதில் வேறொன்றுமில்லை
பத்திரிகைச் செலவை
பத்திரப்படுத்தும்
பல விளம்பரங்கள்

பத்தாம் பக்கத்தில்
பதினொரு பேர் ஆடும்
துடுப்பும் சதமடிப்பும்
வாங்கியது வீணென
வருத்தப்பட்டேன்
மனைவி சொன்னாள்
வடகம் காயப்போடலாம்
வருத்தப்படாதீர்கள் என்று.

சுடர் ஒளி வார சஞ்சிகை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாடி

தமிழன் என்
முகத்தில் தாடி - அதன்
சுதந்திர வளர்ச்சியை
அழித்தொழிக்க
அப்படியொரு கல்மனம்
வரவில்லையெனக்கு
கேட்டேன் நான் காரணத்தை
என்னிடமே
பலதும் பதிலானது
பாரில் தமிழன்
படும் வேதனைகள்..
ஊரில் நாம் தொடும்
சோதனைகள்
சந்தோசமாய் சவரமெடுக்க
முடியவில்லை.
வளர்ந்தது சீரின்றி
ஆக்கினேன் சீராக

மழிக்க மனம்
இன்னும் வரவில்லை
இனத்திற்காய் வருந்திய நான்
இப்போது...?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்காக வருந்த எத்தனைபேர்?
என்ற கேள்வி
எனக்குள் ளெழுந்தது

காலங்கடந்து
கம்பிக்கூட்டுக்குள்
சுதந்திர தாடியை
சுயமின்றிக் களையெடுத்தேன்
என் சுயநலத்திற்கு....
மறக்கமுடியாத நாட்களில்
இதுவுமொரு இடம் பிடித்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்சிகள்

தமிழ் கட்சிகளோ ஏராளம்
தலைவர்களோ தாராளம்
எண்ணிலடங்காதவை - எம்
பிரச்சினைகள்....
குழுக்களிடம் கோருவதா?
கட்சியிடம் கையளிப்பதா?
முன்னணியிடம் முறையிடுவதா?
கழகத்திடம் கதறுவதா?

எவரிடம் சொல்லியும்
எந்தப் பயனும் இல்லையென்று
எமக்குத் தெரியும் - இருந்தும்
நப்பாசையெனும், சொற்பாசையினால்
நாமும் இயம்புகின்றோம்.

எம்மை விட அவர்களுக்கு
ஏராளம் பிரச்சினைகள்
எதிர்ப்பு அரசியலும்
எக்கச்சக்க அறிக்கைகளும்... பதவிப் பிரச்சினையும்
தலைமைப் போட்டியும்
தவிடு பொடியாகும் வரை - எம்
பிரச்சினைகள் எமக்குத் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டணிகள் கூடி
ஒன்றாக இருந்திருந்தால்
எப்போதோ தீர்ந்திருக்கும் - எம்
நீண்ட நாள் பிரச்சினைகள்
தீராத தலையிடியாய்
தொடர்கின்ற பிரச்சினைகள்
சேராத கட்சிகளும் சேர்ந்திருந்தால்
ஓரளவு தீர்ந்திருக்கும் தொல்லைகளும்

மக்களுக்குக் கட்சியா??
கட்சிக்கு மக்களா?
கணக்குப் பார்க்கையிலே
விடையில்லா விடுகதைதான்
மிஞ்சிக் கிடக்கிறது
ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
இல்லையேல் - வெறுப்பது வாழ்வு
கட்சிக்கல்ல....
மக்களுக்கு...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊன்று கோல்

என்னைப் பிடித்து
எடுத்து வைக்கும் - அடி
ஒவ்வொன்றும்
எனக்காக அல்ல
உனக்காகவே மனிதா?
செல்வந்தனிடம்
செழிப்புடனும்
ஏழையிடம்
எளிமையுடனும்
என் வாழ்வு நடந்தாலும்
என்பணி யாவர்க்கும்
ஒன்றே மனிதா?

உனக்கு முன்
பூமித்தாயை முத்தமிடும்
எந்தன் பாதம்
உந்தனுக்கு உறுதுணையே...
மனவலிமை
தளராதே மனிதா?
மாற்றுவலு கொண்ட உனக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேற்றும் பொறுப்பு எனக்கு
இறைவன் உன்னைப் படைத்தான்
சமூகத்தில் சமமாக வாழ

நீயே என்னைப்ப படைத்தாய்
உனக்கு ஊன்றுகோலாய்.

*தினகரன் வாரமஞ்சரி*
29.09.2013




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் மண்ணைக் காதலி

அன்னையாய்
அன்பாய்
அனுபவித்துக் காதலி
ஆசையாய்
ஆனந்தமாய்
ஆத்மார்த்தமாய் காதலி

இனிமையாய்
இன்பமாய்
இயல்பாய்க் காதலி
ஈடுபாடாய்
ஈசனாய்
ஈதியின்றிக் காதலி

உண்மையாய்
உறுக்கமாய்
உணர்வாய்க் காதலி
ஊழியனாய்
ஊக்கமாய்
ஊண்றிக் காதலி

எழுமையாய்
எழுநாவாய்
எறுழ் கொண்டு காதலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக பாவமாய்
ஏக நாதனாய்
ஏதிலார் அகற்றிக் காதலி

ஐக்கியமாய்
ஐசுவர்யமாய்
ஐம்புலன் திறந்து காதலி
ஒற்றுமையாய்
ஒய்யாரமாய்
ஒப்புரவொழுகி காதலி

ஓலைப் புறமேற்று
ஓர் மமாய்
ஓதி யுணர்ந்து காதலி
தாய் மண்ணாம் - ஈழத்
தமிழ் மண்ணை!

*சுடர் ஒளி வார சஞ்சிகை*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவிதி

நான் ஒரு அரசியல் கைதி...
மனைவி பிள்ளைகள் நிர்க்கதி
வன்னியில் உறவுகள் அகதி
பட்டினியில் மக்கள் அவதி!

உலகில் இருப்பது இருசாதி - இந்தப்
போருக்கு காரணம்?
பல்லினச் சாதி
அவைகள் தினமும் மோதி
அதற்கு ஏது நீதி?

இலாபம் அடைவது அரசியல்வாதி
நாட்டில் இல்லை ஏற்றுமதி
தினமும் ஆயுதம் இறக்குமதி
இது தழிழினத்திற்கு வெகுமதி
அன்று வானில் தோன்றியது முழுமதி
இன்று வானில் வருவது செய்மதி

பல்லாயிரம் உயிர்கள் சமாதி
வானொலியில் கேட்பது செய்தி
அது சொல்லப்போகும் சேதி?
அருகில் இல்லை அமைதி
இது தமிழினத்தின் தலைவிதி!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புமிகு மகளிரே

மலையக மங்கையரே....
மாண்பு மிகு மகளீரே ..
மலையகத்தில் பிறந்ததற்காய்
மனையியல் மட்டும் போதுமென்று
மானங்கெட்ட மானுடன்
சொன்னானா?

உள் நாட்டில்
பணிப் பெண் பதவியா?
பயப்படாதே - நீயும்
பட்டதாரியாகலாம்
பார் போற்றும் பெண்ணினத்தை
பலியிட நினைப்போரை
திகிலடையச் செய் மகளே!

கொழுந்து பறிக்கும்...
உன் கைகள்
கணனியை திறக்க வேண்டும்
கொழுந்துக் கூடைக்கு - தலை
சாய்த்தது போதும் - தங்கப்
பதக்கத்திற்கு தலை வணங்கு
தமிழ்ப் பெண்ணே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரப்பகுதியில்..

வீட்டு வேலைக்கு

மலையகப் பெண்கள் விரும்பத்தக்கதாம்

அவர்களிடம்

அப்படி ஒரு அனுதாபமா?

அழித்தொழி மகளே

அடிமை விலங்கினை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை முரசு

ஒன்று பட்டால்
உண்டு வாழ்வென
ஒற்றுமை முரசு கொட்ட
வெருண்டு நின்று
வேற்றுமை வளர்த்து
வெறுமையாவது
ஒற்றுமை யாகுமா?

வஞ்சம் தீர்க்க
வாகைசூடி
வாழ்வை மறந்து
அன்பு மறந்து
நட்பு மறந்து
புத்தி மழுங்கி
கூடு கலைப்பது
ஒற்றுமையாகுமா?

தனித்து நின்ற யாரும் வெற்றிசூடி
சரித்திரம் படைத்த
சரித்திரமேயில்லா
இம்மண்ணில்
தனித்து நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்று திரும்ப
உன்னால் முடியுமா?

பேதங்கள் மறந்தால் மட்டும்
ஒன்றுபடுவாய்...
வென்று நிற்பாய்
முழங்கட்டும்
ஒற்றுமை முரசு
எட்டட்டும் வெற்றிகள்
ஓங்கட்டும் ஒற்றுமை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் வாழ்வு திரும்புமா?

என் இதயம்
யாருக்குத் தெரியும்?
என் வேதனை
யாருக்குப் புரியும்
என் தனிமையில்
என் சோர்வினில்
யாரென்னைத் தேற்றக்கூடும்?
அரசியற் கைதியென் வாழ்வில்
அரசியல்வாதிகளும்
அதிகாரிகளும் - என்னாயுளை
என்னிடம் தருவார்களா?

நெஞ்சில் நினைவுகள் - அதில்
மிஞ்சும் பாரங்கள்
தஞ்சமின்றியே
நெஞ்சம் ஏங்குதே
சிறகொடிந்த பறவைதான்
பறக்கமுடியுமா?
உடைந்த உள்ளந்தான்
ஒன்று சேருமா??
மேன்முறையீட்டிலேனும்
மேன்மை கிடைக்குமா? மீண்டுமென் வாழ்வு
திரும்புமா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க வட இந்து

வடமராட்சி மண்ணின்
வளமிக்க பள்ளியாம்
வட இந்து மகளீர் கல்லூரி
ஆயிரத்து தொளாயிரத்து
நாற்பத்தெட்டாம் வருடம்
மானுடம் போற்றும்
மகளீரைப் பிறப்பெடுத்து
மேதைகளாக்கி,
மேன்மையுடன் விளங்கும்
ஏற்றமிகு பள்ளியாம்
எங்கள் கல்லூரி

வல்லைவெளி தாண்டிய
வற்றாத கடல் வனப்பும்
சொல்விளம்பி பொழிந்திடும்
ஈழமண்ணின் பனந்தோப்பும்
தொப்பளாவத்தை வைரவரின்
புகழ் பூத்த அருட் கொடையும்
திகட்டாத அறிவூட்டும்
யாழ். மண்ணின்
வடஇந்து மகளீர் கல்லூரி
வாழ்க பல்லாண்டு
வாழ்க! வாழ்க!!!



அன்பு மகளின் பாடசாலையை
வாழ்த்தும் முகமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேசிப்பு

மண்ணிற்காய் மரணத்தை
நேசிக்க வேண்டியவன்
மனைவியை நேசித்தான்
ஆண்டுகள் பல கடந்தும்
அடைபட்ட சிறையில் !

நான்கு வழக்குகள்
அவனறிவான்
ஐந்தாவதாய் ஒரு வழக்கு
அண்மையில் வந்தது
அதிர்ந்து போனான்
அது அவளின்
விவாகரத்து விண்ணப்பம்
யாரிடம்
அவன் சொல்லியழ ?
ஆண்டவன் தானறிவானோ?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துள்ளித் திரிந்த
# பள்ளி நினைவுகள்

தொடரூந்து பாதை தாண்டி
தொடக்கக் கல்வி பயில
"காத்தான்"முன் பள்ளி
சென்றதை மறக்கவில்லை...
கைவிரல் சூப்பிக் கொண்டு
காகித கப்பல் விட்டதை
மறக்கவில்லை.

ஊர் நண்பனும் - முன்
பள்ளித் தோழனுமான
"லோகேஸ்"
இது கச்சான்
சாப்பிடு மச்சான் - என்று
ஆமணக்கொட்டையை
சாப்பிடத் தந்ததும்
அறவே மறக்கவில்லை

பாவாடை டொக்ரர் (அவருடைய ரவுசர்)
பருகத் தந்த
உப்புக் கரைசலால்
உயிர் வாழ்கிறேன் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதையும் மறக்கவில்லை.
செல்வகுமாரும் நானும்
பாருக்குள் காலோட்டி
சைக்கிளோடப் பழகுகையில்
நடு அச்சுடைந்து
எச்சிலால் ஒட்டியதை
இன்னும் மறக்கவில்லை.

கிளி/ கனகாம்பிகை பள்ளியில்
ஆண்டைந்து படிக்கையிலே
ஆசிரியர் வேலை நான் பார்த்து
ஐயர் வாத்தியிடம்
அடி வாங்கியதை மறக்கவில்லை...
வறுமையாலும் - என்படிப்பின்
வெறுமையாலும்
குருகுலத்திலிணைந்த போது
கேவியழுதததை மறக்கவில்லை...

ஒரு மடிப்பில் மூன்று தோசை
இரு நேரம் இருக்க வைத்து
தந்த குருகுலமும்...
பெண் பிள்ளைகள்
விடுதிப் பக்கம் - பைய
பதுங்கிச் சென்று
பெரு நெல்லிக்கனியுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேலன் மாங்காயும்
பொறுக்கி வந்து...
மேற்றனம்மாவிடம்
மாட்டிக் கொண்டதும்
மறக்கவில்லை...

கிளி/ இந்துக்கல்லூரியில்
பொம்மர் அடித்து - கண்முன்னே
பள்ளி நண்பன் கால் போனதும் ....
உயர் வகுப்பு சத்தியமூர்த்தியண்ணனின்
தலை சிதறியதும்
கடுகளவும் மறக்கவில்லை...
றோயல் கல்விக் கூடத்தில்
கொப்பி காட்டாமல்
குமார் வாத்தியிடம்
வாங்கிக் கட்டியதும்
வடிவா மறக்கவில்லை.

கிளி/ மத்திய கல்லூரியில்
மதிய நேர
ஆங்கில வகுப்பைக் கட்டடித்து
கால்ப்பந்தாடிய போது.....
ஆங்கில ஆசான் "சொலமன்" சேரிடம்
பெட்டைக் கூட்டமாம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகௌரியுடன் - சுபா
லவ்லி, தர்சி
போட்டுக் கொடுக்க...
விஜி முரளி, தர்மாவுடன்
நானும், கயனும், உருத்துவும்
நாவல் மரத்தைக் கட்டிப்பிடித்து
நல்ல அடி வாங்கியதை
இன்றும் மறக்கவில்லை...

முன்பள்ளியுடன்
நான்கு பள்ளிகள் பயின்று
நான் தேடிய நட்பெல்லாம் - இன்று
நாடெங்கும் சிதறி
கூடுகலைந்து வாழ்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடப் பெயர்வு

கஞ்சி குடித்து .... மிச்சம் பிடித்து
பற்பல கனவுகளோடு
புலம் பெயர்ந்து
வெள்ளையனுக்கு அடி பணிந்து
வியர்வை சிந்தி - விறைக்கும்
பனிக்குள் .....
ஊண் உறக்கமின்றி உழைத்து
உண்டியலில் ஊருக்கு
அனுப்பிய பணத்தில் ....
பெற்றவர்கள்
பிள்ளைகளின் எதிர்காலத்திற்கென்று
வட்டக்கச்சியில்
கச்சிதமாய்க் கட்டினார்கள்
வீடொன்றை.....
பெற்றமகன் பிள்ளை குட்டியுடன்
பெருமையோடு நம்மண்ணில்
வாழவென்று....

குண்டுச் சத்தம் கேட்டது
தம்பனையில் - இது தமிழனுக்கு
பழகியது என நாமிருந்தோம்
வெள்ளாங்குளத்து உறவுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேரறுந்த மரங்களாய் - முழங்காவில்
பிள்ளையார் முற்றத்தில்
மூட்டை முடிச்சுகளோடு நின்ற போதும்
அவசரமின்றி அமைதியாய்
நாமிருந்தோம்

அக்கராயன் குளத்து அன்ரியும்
பிள்ளைகளும்
அப்பாவை இழந்து....
அழுது கொண்டு வருகையில்
நம்பிக்கை என்னும் தும்பிக்கை
சரியத் தொடங்கியது.

சரமாரியான குண்டுச் சத்தங்களும்
வான் கழுகுகளின் வட்டமடிப்புகளும்
கிளிநகரை அதிரவைக்க
அவசர அவசரமாக அனைவரும்
விசுவமடு வீதியில்
மனதில் பெருங் கனத்தோடும்
கண்ணீரோடும்
மக்களோடு மக்களாக
நடைப்பிணங்களாய் - கைவிட்ட
சொத்துக்களையும்
காயப்பட்ட உறவுகளையும் கடந்து
புதுக்குடியிருப்பை மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாண்டவில்லை - அத்தோடு
மறக்கமுடியாத வேதனைகளையும்
தாண்டினோம்!

சொல்லியழ யாருமின்றி
உண்ண உணவின்றி
கதறியழும் பிள்ளைக்கு - குடி
தண்ணீர் கூட இன்றி
புதுமாத்தளன் சென்று
மரநிழல் கூட இல்லாத
மணல் தரையில் மண்டியிட்டு
மனிதாபிமான நிறுவனத்தின்
யானைப் பசிக்கு சோளப் பொரி போல
போடப்படும் பிச்சைதனை
உயிர் மீது ஆசை கொண்டு
உணவாக ஏற்று!
கடல் நீரின் உதவியுடன் காலமதைக் கழித்து
காலடியில் காலன் வந்து
நின்றவேளை!
அறைகூவல் விடுத்து
அழைத்தது அரசாங்கம்
"அவசரமாக உள்வாருங்கள்!!
உங்கள் வரவுக்கு
காத்திருக்கிறோம் நாங்கள்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்காக என்று அறியவில்லை
வேறு வழியின்றி - பெற்றெடுத்த
குஞ்சுகளின் உயிருக்காக
குலைநடுங்க சரணடைந்து
ஓமந்தைச் சாவடியில்
ஒரு வாரம் சோதனை முடித்து
வேதனையுடன்
பாடசாலை படிப்பறையில்
படுத்தெழும்பி!
புறநகர் பகுதியாம்
செட்டிக்குளத்தின்
மெனிக்பாம் முகாமினுள்
முடங்கினோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகமே!

## நீயும் சமூகத் துரோகியா?

சமூகமே...
முன்னாள் போராளி யார்?
உனக்குத் தெரியவில்லையா?
தெரியாது
ஏனென்றால் ...நீ
இருப்பது நெருப்பிற்கு மத்தியில்!

சமூகமே...
உனக்காகவே அவ(ள்) ன்
முன்னாள் போராளியானா (ள்)ன்
அதையேனும் நீ அறிவாயா?
இப்போ உனக்கேன்
அவ(ள)ன பிடிக்கவில்லை..?

சமூகமே...
வரியோடு வருகையில்
வரவேற்றாய்
வன்னியில் மட்டுமல்ல
தேசம் முழுவதிலும்!
நம்பிள்ளை பொறுப்பாளர் - என
பெருமிதம் கொண்டாய்
இன்றவ(ள)ன...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கவே பெரும்பயம்
கொள்கிறாய் !

சமூகமே...
புணர்வாழ்வு பெற்றாரே(ளா)னா
இல்லையோ....
புலன் விசாரணை முடித்தல்லவா
வீடு வருகிறா(ள்) ன்
இன்னுமேன் தயங்குகிறாய்...?
இன்முகத்துடன் .....
இணைத்துக்கொள்!

இருக்கிறம் சஞ்சிகை
21.04.2011


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையிலிருந்து அம்மாவுக்கு

அம்மா நலமா?
அனைவரும் சுகமா?
உரிமையோடு
நீங்கள் வாழத்தானே - என்
வாழ்விழந்து
வாடுகிறேன் - ஆயுள்
கைதி நானே

அம்மா நலமா?
அனைவரும் சுகமா?
அடைப்பட்ட சிறையினிலே
வன்னி நினைவோடு நானும்
வருங்காலம் எமதாக
வணங்குகிறேன் மாதாவே
விடுதலையே எமக்கிங்கு
வினாவாகிப் போகும்
உறவு கூட சில நேரம்
எனை மறந்து செல்லும் ...

அம்மா நலமா ?
அனைவரும் சுகமா?
நான்வசித்த முதல் வீடு - உன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவறையம்மா
நான் வாழும் இறுதி வீடு - இச்
சிறையறையா அம்மா?
கருவறையில் வெளி வந்தேன்
காதினில் கேட்டதம்மா
ஆராரோ! ஆரிரரோ!!
இங்கு தினம் கேட்குதம்மா
இதரன் மொழி

2011 கிறீஷ்மஸ் தினப் போட்டியில் சான்றிதழ்
பெற்ற கவிதை – அனுராதபுரம்
சுடர்ஒளி வார சஞ்சிகை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தைத்திருநாள் 2009

தைத்திருமகளே!
தரணியில் நாம்
உழவர் திருநாளை
உன்னதமாய் கொண்டாட
முடியவில்லையே!

பொங்கலோ பொங்கலென்று - எம்
பிள்ளைகள் கொண்டாடி...
மகிழ்ந்தது போய் - இன்று
வேட்டொலி முழங்க
அழுகுரலொலி விளங்க...
ஒரு வேளை கஞ்சிக்கே!
வழியின்றி வானத்தைப் பார்த்து
அஞ்சிப் பயந்தோடுகிறார்கள்
பச்சைப் பாலகர்கள்
இடம் பெயர்ந்து, பெயர்ந்து - இனி
பெயர்வதற்கு இடமின்றி
உணர்விழந்து நிற்கிறார்கள்
சூரிய பகவானே! சற்றுக் கீழே பாருங்கள்
பாரினில் மக்கள் படும் அவலத்தை
தேவைதானா?
இந்த நிலையில் ஒரு தைப்பொங்கல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவிற்காய் ஒரு தீபம்

அன்னை பிதாவான
முன்னறி தெய்வங்கள்
ஆசை சோதரர் அகம் மகிழ....
அரபு நோக்கிய பயணம்!
சாபி நகரில்
சீரான மனையொன்றை
தானாகமைத்து
மூதூர் மன்னில் - தம்
பாமரம் போக்கிட
பதின்ம வயது பருவமங்கை
"றிஷானா"
பேரெதிர் பார்ப்புடன்
திரைகடல் ஓடினாள்
திரவியம் தேடி!
பதிணெட்டுத் திங்கள்
பணிப் பெண்ணாய்
இருந்த பாவை
பாலகனுக்கு பாலையூட்டி
கொலைப்பழி தான் சுமந்தாள்!
கனவுகள் அத்தனையும்
கலைந்து போனது
மூவிரண்டு வருடங்கள்
சாவொறுப்பு தீர்ப்பளித்து
அடைப்பட்டு கிடந்தாள் அல்தவாத்மி சிறையில்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதையவள் உயிர் மீட்க
புறப்பட்ட அரசியல் வாதிகள்
இராஜ தந்திரமாய்
அரபு சென்று திரும்பினர்
ஆகிய தொன்றும் இல்லை!
மருத்துவர் கிபாயா வின்
மனிதாபி மானத்தால்
மரணிக்கும் முன் ....
மங்கையவள் குரலை கேட்டது தான்
மிகுதியாச்சு!

"ஷரீஆ" சட்டம்
சரியாக நிறைவேற
குருத்துடலிருந்து குருதி கசிந்தது!
மூதூர் மண் மூச்சிழந்து போனது .....
பத்திரிகை அறிக்கைகள்
பலவாறு முளைத்தது!
கண்டனங்கள் கோஷங்கள்
காது கிழிந்தது - ஏன்
கண்கெட்டபின் சூரியநமஸ்காரமா?
இறுதி ரிஷானா
இதுவாக இருக்கட்டும்....
இலங்கைத் தாயே
உறுதியெடுத்துக்கொள்!

முஸ்லிம் முரசு பத்திரிகை
22.05.2013




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றின் நிறம் கறுப்பு அல்ல...

இமைகளை இதமாய் மூடி...
புருவ மத்தி குறுகுறுக்க...
நுரையீரல் விரிய, விரிய
ஆழமாய் அவசரமாய் சுதந்திரமாய்
சுவாசிக்க வேண்டும்

இந்த நகரத்துக் காற்றில் நம்பிக்கையில்லை
காற்றின் நிறம் கறுப்பு இல்லை - இதில்
பிராண வாயு பிரித்தெடுக்க
நாசிக்கு சக்தியில்லை
நம்மைச் சுற்றியுள்ளது காற்றல்ல - இது
எரிபொருளின் வளி வடிவம்
இதைச் சுவாசிப்பதெனில் ....
இயந்திர மூக்கு வேண்டும் எனக்கு

பாவிகளே
புகைப்பிடிக்காதீர்கள்
காற்று ரணமானது
இயந்திரப் புகை எழுந்தது
காற்று இறுகியது வானளாவின்
காற்று கெட்டிப்பட்டது.
எப்படி சுவாசிப்பது
நுரையீரல் இப்போது
எஃதினால் வேண்டும் எனக்கு?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடிகுண்டுகளின் பெருமூச்சு!
ஆலைகளின் கருமூச்சு
தொழிற்சாலை சுடுமூச்சு
எல்லாம் கலந்தால்
அடுத்த நூற்றாண்டில் மனிதன் இருப்பானோ?
இல்லை அடுத்த நூற்றாண்டில்
காற்றுதான் இருக்குமோ?
புற்றுநோய் வருவதேன்?
நஞ்சூட்டிய காற்றின் நன்கொடையப்பா
பருவமழை பொய்த்ததேன்?
மேகத்தில் சுத்தக்காற்று
செத்து விட்டதப்பா ....
வெடிகுண்டு துகள்களினால் - காற்று
எப்போதோ கற்பிழந்து போனதப்பா
பாவிகளே!
காற்றுக்கு உயிர் கொடுங்கள்
மனிதனை கொன்று தான்
விஞ்ஞானம் பிறக்குமா? இல்லை
சுவாசமே இல்லாத
மனிதனைப் படைக்குமா?

சுற்றுச் சூழல் தின கவிதைப் போட்டிக்கு
எழுதிய கவிதை - 2010 வவுனியா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னால் முடியும்

சரியாகக் கற்றுக் கொள்
சாரதியத்தை
உயிர் பறிக்குமுரிமை
உனக்குமில்லை
எனக்குமில்லை - சாரதி
ஆசனத்தில் அமர்கையில்
மாற்று சிந்தனையை
மறந்துவிடு
மனித உயிர்களை
மனதிலெடு
விதியை மதியால் வெல்ல
வீதி யொழுங்கை கடைப்பிடி
பயணியர் பலர் பலியாவதை
பக்குவமாய் நிறுத்திடு

ஓட்டுணனே...
கைப்பேசியை
காதில் வைக்காதே
காலன் காத்திருக்கான்
மனித உயிர்களை
மலிவாகப் பெறுவதற்கு,
வீதிச் சமிக்கையினை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரமாய்த் தெரிந்து
பாதசாரிகளை
பக்குவமாய் நோக்கு
பாதையொழுங்கினையும்
பலருக்குக் கூறு
சாமர்த்திய சாரதிகளை
சமூகம் போற்றட்டும்.

*தினகரன் வாரமஞ்சரி*
08.09.2013




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் விடுதலை

அடுப்படியில் கிடந்து
அகப்பையை நாடினாள்
அக்காலப் பெண்
அடிமை விலங்குடைத்து
ஆயுதம் ஏந்தினாள் தற்காலப் பெண்
அகிலத்தின் உயர் பதவியாம்
அன்னையவள்
அப்பெருமைக்குரியவள் பெண்

ஆணுக்கு நிகர் பெண்ணென்று
அறிய வைத்தாள் - புரட்சிப் பெண்
ஆடவர் மத்தியில்
அவள் புரிந்தாள்
பல வெற்றிகள்
மானிடம் போற்றும் மாதர்கள் - அன்று
ஆணிடம் பட்ட துன்பங்கள் மறைந்து
இன்று நானிலம் போற்றும்
மங்கையராய் - பூ மாலை
சூட்டி புகழுமளவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரினில் படைத்தார்கள்

சாதனைகள் சரித்திரங்கள்

சோதனைகள் மத்தியில்

வேதனை என்னவென்றால்

இன்னும் புரிந்து கொள்ளவில்லை

பெண்களை - சில

ஆடவர்கள்.

அனைத்துலக பெண்கள் தினம் - 2011ல்
கொழும்பு தமிழ்ச்சங்க போட்டிக்கு எழுதியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கை கோர்ப்பபோம்

இனங்கள் இணைந்து
மனங்கள் மகிழ
கை கோர்ப்போம்!
சமயங்கள் மதிப்போம்
ஒற்றுமை சமத்துவம்
ஓங்கிடச் செய்வோம்

இன பேதம்
இல்லா தழிப்போம்
சாக்கடை அரசியலால்
சீர் கெட்டு நிற்கும்
தாயகத்தை மீட்போம்!

*உதயன் - சூரியகாந்தி*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்"

சதீஸ்! ஆம் மண்ணின் வாஞ்சையை அடையாளப் படுத்தும் கிளிநொச்சி விவேகானந்த நகர் பெயரை அடை மொழியாய் முன் னோக்கி "விவேகானந்தனூர் சதீஸ்" சுகாதாரத் துறையிலே உயிர் காப்புப் பணிசெய்து அத்துடன் சமூகநற் பணிகள் செய்கின்றபோது எனக்கு அறிமுகமானார்.

அவர் கடந்த சில வருடங்களாக தான் சார்ந்த சமூக கலாச்சார பண்பாடுமற்றும் அரசியல் போன்ற பல்துறைசார் விடயங்களை கவிதை, கட்டுரை, சிறுகதை, விமர்சனம் போன்ற சொல் லுருபுகளுக்குள் புகுத்தி புனைபெயர்களில் எழுதிவருபவர் சதீஸ் அவர்களுடைய படைப்புகள் பலவற்றை பல்வேறு அச்சு ஊடகங் களில் சஞ்சிகை இதழ்களிலும் அவதானித்துள்ளேன்.

தமது சுதந்திரவாழ்வு வரையறைக்குள்ளாக் கப்பட்டு காலத் தின் கோலத்தால் கூட்டுக்கிளியாக்கப்பட்ட போது இவ்வாண்டுகளை தன் சிந்தனைத் தேடலுக்கான எண்ணங்களைப் பறக்கவிட்டார். அதன் விளைவாக உளவியலாய "இரும்புக்கதவுக்குள்ளிருந்து" என்ற கவிதைத் தொகுப்பினூடாக இரும்புக்கதவுக்குள் இருப்பவர் களின் ஏக்கங்களாய், குடும்பத்தின் மனோநிலைக் கண்ணாடியாய் மட்டுமல்ல தமிழ் சமூகத்தின் இடப்பெயர்வு, புனர்வாழ்வு ஊடக ஒடுக்குமுறை, பெண் சுதந்திரம் மற்றும் சிறையின் அனுபவங்கள் என பலவற்றாலும் தனிமையின் தேடல்களால் மூடு திரையில் அதுவும் இலகு தமிழில் அனைவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய புதுக்கவிதைகளாய் பதிவு பெற்றிருப்பது அவரது ஒரு வெற்றிப் படியாகும்.

அவரது வாழ்வு சுதந்திரக்காற்றைச் சுவாசிக்கும் போது அவர் கவிதைகள் மேலும் சிறகடித்துப்பறக்கும். அவரது கன்னிக் கவிதைப் பாதையில் தடைகள் தாண்டி தனக்கென தடம்பதிக்க என் றும் என் நல்லாசிகள்.

*கலாநிதி நல்லையா குமரகுருபரன்*
*Charted Business Administrator*
*Secretary of the society of CBAS of Sri Lanka*

9 789555 444804

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org